உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 31 | பரிதாபி – ஆனி – 10—7—72 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## ஆளுடை அடிகளின் அருள் திருநாள்

'மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்' என்பது ஒரு பழமொழி. 'ஒன்றைத் தோற்றுவித்தவர்க்கு, அதனைக் காப்பாற்றுவதும் இன்றியமையாக்கடனாகின்றது' என்பதையே இப்பழமொழி தெரிவிக்கின்றது. "தாம் வளர்த்தது ஓர் நச்சுமா மரம் ஆயினும் கொல்லார்" என்பது திருவாசகம். இவ்வாறே உலகத்தைத் தோற்றுவித்த இறைவனுக்கு, அதனை ஒழுங்குபெற நடத்துவிப்பதும் இன்றியமையாததாகின்றது. அதன் பொருட்டு அவன், 'நல்லது இது; தீயது இது' என்பதை முதல் நூல் வழியாக ஒருகாலத்தில் உலகிற்கு உணர்த்தினான். ஆயினும், கால வேறுபாட்டால் மக்கள் அந் நூல்நெறியை உணர மாட்டாது மயங்கியும், பிறழ்ந்தும் தடுமாறும்பொழுது, தனது திருவருளுக்குரிய அருளாளர் பலரை அவ்வப்பொழுது உலகில் தோற்றுவித்து, அவர்களது அருள் வாழ்க்கையினாலும், அருள் மொழியினாலும் உலகத்தை நன்னெறிப்படுத்தி யருள்கின்றான்.

அத்தகைய அருளாளர் பலரை வழிவழியாகப் பெற்றுவரும் பெரும்பேற்றினை நம்தமிழகமும் அவ்வப்பொழுது பெற்றுள்ளது. அவர்களில் முதன்மையாக எண்ணப்படுபவர்கள் நம் சமயாசாரி யர் நால்வருமாவர்.

சமயாசாரியர் ஒருவராக இல்லாமல், நால்வராய் இருக்கு மாறு இறைவன் திருவருள் செய்தமையைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். உலகுயிர்கள் பல திறத்தன. அவை அனைத்திற் கும் ஒரே வகையான வாழ்க்கை அனுபவமும், அவ்வனுபவம் பற்றி வரும் வாய்மொழிகளும் போதியனவாகா. பல்வேறு வகையான அனுபவங்களும், அவை பற்றி எழும் பல்வேறு வகையான வாய்மொழிகளும் வேண்டும். அது பற்றியே இறை வன் தனது திருவருளைப்பெற்ற அருளாளர்களைப் பல்வகை நிலைகளில் வைத்துக் காட்டி, அந்நிலைகளிலிருந்தெல்லாம் பல வகையான அருள்மொழிகளை வெளிவரச்செய்து, உலகிற்கு வழிகாட்டி யருள்கின்றான். அறுபான் மும்மை நாயன்மார்களது வாழ்க்கை வரலாற்றில் நாம் உலகிற்கு வேண்டிய பலவகை அனுபவங்களையும் நன்கு காணமுடிகின்றது. சிறப்பாகச் சமயாசாரியர் நால்வரது வாழ்க்கையில் அத்தகைய அனுபவங் கள் பலவற்றை நாம் காணுதல் கூடும்.

ஞானசம்பந்தரது நிலை என்றும் உலகியலே பற்றாதது. பிள்ளைமைப் பருவம் ஒன்றில் நின்றே அருள் அனுபவங்கள் பலவற்றை அவர் அடைந்து, அவற்றை உலகிற்கு எடுத்தோதி யருளினார். பிள்ளை யுள்ளம் வெள்ளையானது; கள்ளம் அற்றது. ஆகவே, அத்தகைய உள்ளத்திலிருந்து தோன்றுவன யாவும் முழு உண்மைகளாதல் தெளிவு. எனவே.

"தோடுடைய செவியன், விடை யேறி,
    ஓர் தூவெண் மதி சூடி,
காடுடைய சுடலைப் பொடி பூசி
    என் உள்ளம் கவர் கள்வன்............
பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே"

"போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்"

"ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி"

" பருமதில் மதுரை மன் அவை யெதிரே
பதிகம தெழுதிலை யவை யெதிரே
வருநதி யிடைமிசை வருகரனே
வசையொடும் அலர்கெட வருகரனே "

என்பன முதலாகப் பிள்ளையார் திருமொழிகளாக எழுந்தன பலவும் உலகிற்கு ஒப்புயர்வில்லா உண்மை விளக்கங்கள் என்பதில் ஐயம் இல்லை.

இவ்வாறாயினும் சிலர், 'பிள்ளை மொழியினும் முதியவர் மொழியன்றோ முதிர்ந்த அனுபவ மொழியாதல் கூடும்' என நினைவர். அந்நிலைக்கு அப்பர் பெருமானை அளித்தருளினன் இறைவன். அவர், "செல்வத்துப் பயன் ஈதலே" அவ்வாறின்றி, " துய்ப்பேம் எனினே தப்புந பல " என்று, தேசநெறியது நிலையாமையையும், அறத்தினது நிலைபேற்றையும் உணர்ந்து, காவளர்த்தும், குளந்தொட்டும், கடப்பாடு வழுவாமல் இரவலர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும், விருந்தோம்பியும், நாவலர்க்கு வளம்பெருக வழங்கியும் இல்லற நெறியாகிய ஈகை வினைத்துறையில் முதற்கண் நின்றார். பின்பு, 'இந்நெறிதானும் பிறப்பு இறப்பாகிய நிலையாமையைத் தருவதன்றி, நிலைத்ததாகிய வீடு பேற்றைத் தாராது' என்று, நில்லாத உலகியல்பு கண்டு, 'இந்நிலையா வாழ்க்கை வாழேன்' என்று அறத்துறந்து, சமய நூல்களை ஆராயத்தொடங்கி, நம்பர் அருளாமையினால், தாம் பிறந்த சைவ சமயத்தினும் சிறந்தது சமண சமயம் என மயங்கித் தம் தமக்கையார் சொல்லையும் கேளாது அதில் வீழ்ந்து அல்லற்பட்டுப் பின்னர் மீண்டும் தமக்கையாரையே அடைந்து அவர் வழிநின்று சைவராகும் நலம் பெற்றார். பின்பு, 'இந்நன் னெறியைச் சாராதே சால நாள் போக்கினேனே; போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே".

" வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே "

என்றாற்போலக் கழிவிரக்கங்கொண்டு பாடியதோடு,

" சொற்றுணை வேதியன், சோதி வானவன்,
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டி ஓர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே "

என்பதை அனைவரும் அறிய அனுபத்திற் காட்டியருளினர். மற்றும் உழவாரப் பணியாகிய கைத்தொண்டும் செய்து திருத்தொண்டின் பெருமையை உலகிற்கு விளக்கியருளினர். இத்தகைய அவரது வாழ்வியலும், வாய்மொழியும் எத்துணை உண்மைகளை எவ்வளவு தெள்ளத் தெளிய நமக்கு விளக்கி நிற்கின்றன !

இவை இவ்வாறு விளக்கி நிற்பினும், சிலர், ' ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் எக்காரணம் பற்றியோ குடும்ப வாழ்க்கையில் தொடர்புகொள்ளாதவராயினர். அத்தகையோர்க்குத்தான்- அஃதாவது குடும்ப வாழ்க்கையைமேற்கொள்ளாதவர்க்குத்தான்- இறைவன் திருவருளைப் பெற முடியும்; மற்றவர்களுக்கு அது முடியாதுபோலும்' என்று தவருக எண்ணித் திகைக்கலாம். அதற்கு மாறாக இறைவன் சுந்தரரை உலகில் அருள் வாழ்க்கை வாழச் செய்தான். அவர் முன்னர் ஒரு மணத்தைத் துறந்தாராயினும், பின்னர் இருமணத்தைக் கொண்டு இன்புற்று வாழ்ந்தே இறைவன் திருவருளிலும் இடையருது நின்ருர்.

" இறைவன் மெய்ப்பொருளேயன்றிப் பொன்னும் தருவான்; திருவேயன்றிப் போகமும் புணர்ப்பான்; அம்மையில் சிவலோகமேயன்றி, இம்மையில் சோறும் கூறையும் தருவான்; ஏழிசையாய், இசைப் பயனய், இன்னமுதாய், நம்முடைய தோழனுமாய், நாம் செய்யும் துரிசுகளுக்கும் உடனுவான், முப்போதும் கறிவிரவு நெய்சோறு, கத்தூரி கமழ் சாந்து காம்பிஞேடு நேத்திரங்கள், காற்றனைய கடும்புரவி முதலிய பலவும் குறைவறக் கொடுப்பான், அவ்வாறு கொடுக்கத் தாழ்ப்பானுயின், ' தாரீரேல் அடியெடுக்கலொட்டோம், உங்களுக்கு ஆள் செய்யமாட்டோம்; என்றெல்லாம் வன்மைபேச நமக்கு உரிமை யுண்டு; ஆனல், நாம் வழுக்கி வீழினும் அவன் திருப் பெயரல்லால் மற்று மறுமாற்றம் கூற அறியேமாய், அவன் திருப்பெயரை, நாம் மறக்கினும், நமது நாத் தானே சொல்லுமளவிற்கு ஒழிவின்றிப் பயின்று, அவ்வாறு பயிலாது ஒவும் நாளை உணர்வழியும் நாள், உயிர்போகும் நாளாகக் கருதி மற்றுப் பற்றின்றி வாழ்தல் வேண்டும்; பெற்றபோதும், பெருதபோதும் அவன் கழலைப்பேணி ஏத்துதல் வேண்டும்; யாவர்க்கும் திருவும், மெய்ப்பொருளும், செல்வமும் அவனது சீருடைக் கழலன்றி வேறில்லை' என்பவற்றையெல்லாம் இனிது விளக்கியருளினர்.

' எத்துணைப் பேரருள் பெற்ருேராயினும் - அவர்கள் செய்யும் துரிசுகளுக்கு இறைவன் உடனய்நின்று அவர்தம் பிழையைப்

பொறுப்பானுயினும், – 'பிழையுள்ள பொறுத்திடுவான்' எனக் கருதி ஒருபோதும் பிழை செய்தல் கூடாது. செய்யின், அவன் ஒன்னலரைக் கண்டாற்போல் சிறிதும் கண்ணோட்டம் இன்றிக் கண்ணைக் கெடுத்துக் கழித்தலைப்பட்ட நாயதுபோல ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கவும், குன்றில் முட்டிக் குழியில் விழவும் பண்ணி ஒறுத்தலைச் செய்யச் சிறிதும் தயங்கமாட்டான்' என்பதையும், 'இருதாரமணம் எத்துணை இன்னலை விளைப்பது' என்பதையும் நம்பியாரூரர் வாழ்க்கை இனிது விளக்குதல்போல வேறொன்றும் விளக்கி நிற்றல் இயலாது.

ஆளுடைய நம்பிகள் வைதிகத்திருவோடு மன்னவர் திருவும் பெற்றவராயினும், அவர் மன்னவர் திருவில் இருந்து தீனக்கும் அதிகாரத்தை வகித்திலர். ஆகவே, அத்தகைய அதிகாரத்தை வகிக்கின்றவர்கள் இறைவன் திருவருளைப் பெறுதல் கூடுமோ எனச் சிலர் ஐயுறலாம். அவ் ஐயத்தைப் போக்கும் வகையிலே இறைவன் வாதவூரடிகளை மண்ணுலகிற்குத் தந்தருளினுன்.

அடிகள் திருவாதவூரில் பாண்டிய மன்னர்க்கு வழிவழி அமைச்சுரிமை பூணும் அமாத்தியர் குடியில் தோன்றி அமைச்சுரிமைக்கு வேண்டும் தகுதி பலவும் உடையராய்ப் பாண்டிய மன்னனுல் பெரிதும் மதிக்கப்பெற்று முதல் அமைச்சராய் அரச பாரம் முழுவதையும் தாமே தாங்கி நடத்தி வந்தார். அடிகள் தம் குடிப்பிறப்பிற்கு ஏற்ப உலகியல் வகையில் புறத்தே இத் தகைய அரச பாரத்தை இனிது தாங்கி நின்ருராயினும், அகத்தே, 'இனி என்னே உய்யுமாறு என்றென்று எண்ணி' அஞ்செழுத்தின் புணை பிடித்து. அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனுகி ஆட்கொள்வது எப்பொழுதோ' என்னும் ஏக்கம் உடையராய்க் 'கூத்தினர் தன்மை வேறு கோலம் வேருகுமாபோல்' திருவருள் தாகம் உற்றிருந்தார். அதனல் பாண்டியன் பொருட்டுக் குதிரை வாங்கச்சென்ற அவரை இறைவன் திருப்பெருந்துறையில் குருவாகி வந்து ஓர் வார்த்தையுட் படுத்துச் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆண்டருளினன். அடிகளும் அன்றே தமது ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அனைய தம் குருபரன்பால் கொடுத்து, அப்பெருமான் அளித்தருளிய நவமாய செஞ்சுடரால் 'நாம்' ஒழிந்து சிவமாகி நின்றுவிட்டார்.

இவ்வாறு அவர் தம்மை இழந்து சித்தம் சிவமாகிச் செய்தனவே தவமாக நிற்கும் நிலையில் தம் ஆசான் மூர்த்தி அருளின் வண்ணமே தாம் கொண்டு சென்ற பொருளையெல்லாம் இறை

பணி அடியார்பணிக்கு ஆக்கினர். வழிவழிச் சிவபத்தராய் நின்று செந்நெறியில் நின்று செங்கோல் ஓச்சி வந்த பாண்டிய மன்னரது கருவூலத்திலிருந்த பொருள் அறத்தாறு ஈட்டிய அரும்பொருள் ஆதலின், அது அடிகள் வாயிலாகச் சிவபுண்ணியச் செயல்களுக்கு உரித்தாகி, அதனை ஈட்டி வைத்துச்சென்ற முன்னைப் பாண்டியர்களையும், அன்று அதனைக்கொண்டு செல்லக் கொடுத்த அரிமர்த்தன பாண்டியனையும் திருவருட்கு உரியராகச் செய்தது. எனினும் அதனை யறியாத பாண்டியன் உலகியல் முறைப்படி அடிகளை ஒறுத்த ஒறுப்பையெல்லாம் இறைவனே ஏற்று அடிகளை இன்னலின்றும் நீக்கிச் சிந்தை மகிழச் சிவ புராணம் முதலிய செஞ்சொல் மழையைப் பொழிவித்துக் காலம் வந்தபொழுது திருமா மணிசேர் திருக்கதவம் திறந்தான். அதுபொழுது; சிந்தனையைச் சிவபெருமானது திருவருட்கும், கண்ணிணையும், வந்தனையும் அவன் திருப்பாதப் போதிற்கும், வாக்கு அவன் மணிவார்த்தைக்கும் ஆக்கி நின்ற அடிகள், "பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்கரியான் பெருமான்: ஆகவே, நிற்பார் நிற்க; நில்லோம் இனி நாம் செல்வோம்; ஆவா என்னப்பட்டு அன்பாய் ஆட்பட்டீர் வந்து பெருஞ் சாத்தோடு உடன் போவதற்கே ஒருப்படுமின்; அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள் அணியார் கதவது அடையாமே" என்று அழைத்து, புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே புகுந்து யாவரும் பெற்றறியா இன்பத்தைப்பெற்று மகிழ்ந்தார். ஆளுடைய அடிகளது அருள் அனுபவமும், தேனும் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் திருவாசகமாம் அவரது திருமொழியும் நம்மனோர்க்கு எத்துணை உணர்வைத் தந்து, உள்ளத்தை உருக்குகின்றன!

மேலும், 'அடித்து அடித்து அக்காரம் தீற்றும் முறையில் பாண்டிய மரபினர்போல அறநெறி நிற்பவரை இறைவன் வழியைப் புகுந்து எவ்வாற்றாலேனும் திருவருட்கு உரியராக்கி, நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல் பரகதி பாலிக்கின்றான்' என்பதையும், 'உலகியலில், ஒப்பிப் பணி செய்யாமை, உடைய னல்லான் விற்றல் முதலியவை குற்றமாய் முடியும்' என்பதையும், அடிகளது வாழ்க்கையும், வாய்மொழியும் உலகத்தார்க்கு நன்கு விளக்குவனவாம். இவ் அனைத்து முறைகளையும் ஒருவராலே விளக்குதல் அரிதாதலின், நால்வர் ஆசாரியரை இறைவன் நானிலத்திற்கு உதவியருளினன்.

இனி நாயன்மார் பலரது வாழ்க்கைகள் வாய்மொழிகள், சந்தானசாரியரது வாழ்க்கைகள் வாய்மொழிகள் என்பனவும்

இப்பெற்றியனவேயாம். ஆகவே, இவற்றையெல்லாம் உலகம் உணர்ந்து பயன்பெறுதற் பொருட்டே அடியவர் திருநாள்களை யும், ஆசிரியர் திருநாள்களையும் பெருநாள்களாகக்கொண்டாடும் முறை ஏற்பட்டுள்ளது. "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்பதுபோல, இந்நாட்களைக் கொண்டாடுவதால், கொண்டாடுபவர் பக்தியும், ஞானமும் மிகப்பெற்றுப்பயனடைதல் அன்றி, அவர்கட்கு இவற்றால் யாதொரு பயனும் இல்லை. ஆகவே, இத்தகைய பெருமக்களது திருநாட்கள் பலவும் சிறப் பாகக் கொண்டாடப்படல் வேண்டும். அஃது இயலாதபொழுது, ஆளுடையபிள்ளையார், ஆளுடைய அரசுகள், ஆளுடைய நம்பிகள், ஆளுடைய அடிகள் என்னும் ஆசாரியர் நால்வரது திருநாட்களையேனும் தவறாது கொண்டாடுதல் வேண்டும். அவற்றுள் அண்மையில் வருவது ஆளுடைய அடிகளது திருநாள்; அதனை அன்பும், ஆர்வமும் பெருக நாம்அனைவரும் கொண்டாடி அருள்நலம் பெற்று உய்வோமாக.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

### ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி.

திருஞானசம்பந்தப் பெருமான் பிறந்த திருத்தலத்திருக் கோயில் திருநிறை அழகுத் திருக்கோயிலாகத் திகழ்கிறது. அதனைத் தெரிசிக்கும் பேறு இன்று எனக்கும் என் குடும்பத்தா ருக்கும் கிடைத்தது. இறைவழிபாட்டுக்கு வருவோரது உள் ளத்தை ஒருமுகப்படுத்திக் கவரத்தக்க பொலிவும் அமைதியும் தூய்மையும் கொண்டு விளங்கும் இக்கோயில் தருமை ஆதீனக் கோயில்களின் நிருவாகச் சிறப்பைத் தெளிவுற வெளிப்படுத்து கிறது. கோயிலின் சிறப்புக்களையெல்லாம் முறையாகத் தெரிசனம் செய்வித்த கோயில் மேற்பார்வை சூப்பிரண்டெண்ட் திரு சௌரி ராஜன் அவர்களது சிறந்த பண்பும் திருக்கோயில் பணியின் அவர்கள் திறமும் பாராட்டுதற்குரியது. அவர்களது உலக அனுபவமும் எங்களை மிகவும் மகிழ்வித்தன. கோயிலைச் சீரிய முறையில் வைத்து தக்காரை நிருவாகத்திலமர்த்தி பூசனை வழி பாடுகள் செய்வித்தின் நிகழச்செய்து சைவம்பெருக்கும் தருமை யாதீனக்குருமுதல்வரவர்களுக்கே இப்பெருமையனைத்தும் சாரும். ஆதலின் அவர்கள் பொன்னடிகளுக்கு எங்கள் நன்றியும் வணக் கமும் உரித்தாகும்.

(ஒ - ம்.) M. SP. சண்முகம்,

21—5—72.

( Senior Research Officer.
U. P. S. C. Delhi )

குருபாதம்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டினை ஒட்டி நிகழ்ந்த

**கோடைக்காலச் சமயப் பயிற்சி வகுப்பின்**

தொடக்கத்தில், ( 22—5—72 அன்று )

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

திருவாய்மலர்ந்தருளிய

# அருளுரை

**ஞானப்பண்ணை :**

இன்று ஓர் நல்லநாள். இக்காலத்தில் அரசியல் சுதந்திரம் பெற்றுள்ள மக்கள் எல்லோரும், மத உண்மைகளைப் புரிந்து கொண்டு அறநெறியில் வாழவேண்டும். இந்த உண்மையைத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு உணர்த்துவதற்காகத்தான் இங்குக் கூடியிருக்கின்றோம். இத் தருமையாதீனம் ஞானப்பண்ணையாக விளங்கிவருவது. கி பி 16 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் தோற்றுவிக்கப்பெற்றது இவ்வாதீனம்.

இவ்வாதீனத்தின் 25 ஆவது பட்டத்தில் வீற்றிருந்து அருட் செங்கோல் செலுத்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இவ் வாதீன வரலாற்றில் ஒரு பொற்காலத்தைப் படைத்தவர்கள். தமிழ் மக்கள் - குறிப்பாகச் சைவ மக்கள், தங்களை - தங்கள் மதத்தை - குருபீடத்தை - குருவருள் விளக்கத்தைப் பெற வேண்டும் என்று கருதியவர்கள். அவர்களது அக்கருத்து வளம்பெறவே நாம் இங்குக் கூடியிருக்கின்றோம்.

**உரிமைக்குக் குரல் :**

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் ஆகிவிட்டார்கள். இப் போது மன்னர்கள், ஜமீன்தார்கள், பெருநிலக்கிழார்கள், நிலச்சுவான்தார்கள் நிலையும் மாறிவிட்டது. மடங்கள் கோயில் களின் நிலைகளையும் கூர்ந்து நோக்கத் தொடங்கியிருக்கிறார்கள். மக்கள் நலமாக வாழவேண்டும் என்றால் கோயில்களும் மடங் களும் அவசியம். வாழ்வியலுக்கு வேண்டிய அறநெறியை விளக்கும் சமய நிறுவனங்களாக உள்ளவை மடங்களும் கோயில்களுமேயாகும். இது எந்த ஒரு தனி மனிதனின் சொத்

தும் அல்ல. தனி ஒரு மனிதனின் அனுபவத்திற்கு உரியதும் அல்ல. கோயில்களும் மடங்களும் பக்தர்கள், அறநெறியாளர்கள் கையிலிருக்கவேண்டும்; அரசியல்வாதிகள் கையில் அகப்பட்டால் கட்சிச் சார்பில் போய்விடும்.

நமது ஆதீனம் கட்சிச் சார்பில்லாமல் அரசியலுக்கு என்றும் ஒத்துழைத்து உதவும் நிலையில் இருந்துவருகிறது. கட்சிக்கு வேறாக, சமய நிறுவனங்கள் தொடர்புவைத்து இயங்கவேண்டும். உரிமைக்குரல் கொடுப்போம் என்ற முழக்கம் கேட்கும் இந்நாளில் நாம் சமயத்துக்குக் குரல்கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

## இன்றைய சூழ்நிலை :

புண்ணியங்கள் சுவர்க்கத்தையும், பாவங்கள் நரகத்தையும் கூட்டிவைக்கின்றன என்றும், கடவுள் ஒருவன் இருக்கிறான் என்றும் எண்ணும் இக்காலத்திலேயே போலீஸ் நிலையம், நீதி மன்றங்கள், கோத்ரெஜ் பூட்டுக்கள் போன்றவை அதிகமாகத் தேவைப்படுகின்றன. புண்ணியபாவத்தையும் கடவுள் ஒருவன் இருக்கிறான் என்பதையும் உணரும் இக்காலத்திலேயே இந்நிலை இருக்கிறது எனில் இதனை உணராவிட்டால் என்னநிலை ஏற்படும்? கடவுள் உள்ளபடியே இல்லை என்றாலும் நாம் ஒருகடவுளைச் சிருஷ்டி செய்துகொள்ளவேண்டும் என்று மேலைநாட்டு அறிஞர் ஒருவர் கூறியுள்ளார்.

பதினைந்து ஆண்டுகட்குமுன்னர் மாணவர்கள் எவ்வளவோ அடக்க ஒடுக்கத்துடனும், பயபக்தியுடனும் இருந்தனர். இப்போது கட்டவிழ்த்தநிலை ஏற்பட்டுள்ளது அரசியல் சமுதாயச் சூழ்நிலைகளால் ஒரு சிலர் தூண்டிவிட்டு இந்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். உருவாக்கியவர்களே பின்னர் அவற்றிற்கு இரையாகிறார்கள். இதை நாம் அதிகம் கூற விரும்பவில்லை.

## மதத்தின் மாண்பு :

மதம் மக்களுக்கு அபினி அல்ல பிராணவாயு எப்படி மனிதனுக்கு இன்றியமையாததோ, உணவு எப்படி மனிதனுக்கு இன்றியமையாததோ, மீனுக்கு நீர் எப்படி இன்றியமையாததோ அதேபோல்தான் மதமும் மனிதனுக்கு இன்றியமையாதது; சமய உணர்வு மக்களுக்கு இன்றியமையாதது. ஒவ்வொருவனும் தனது தவற்றை எண்ணுகிறான். தவறான எண்ணங்களைத் தான் எண்ணியவாறே செயல்படுத்தத் தொடங்குகிறான். அதைச் செயல்படுத்தினால் யாராலும் தடுக்கமுடியாது. தவற்றைச் செயல் படுத்தாமல் தடுப்பதே கடவுள் பக்தி; சமயக் கொள்கை; மதாபிமானம்; அகிம்சை.

**அன்பின் ஆற்றல் :**

அறிவுக்கு முதலிடம் கொடுக்கக்கூடாது. அன்புக்குத்தான் முதலிடம் கொடுக்கவேண்டும். தந்தையிடம் கட்டுப்படாத மகன் தாயிடம் கட்டுப்படுகிறுன். இதிலிருந்தே அறிவைவிட அன்பு மேலானது என்று புரியவில்லையா ?

ஞானபீடமாய் விளங்குகிற இவ்வாதீனத்தை நானூறு ஆண்டுகளுக்குமுன் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தோற்றுவித்தார். அது முதற்கொண்டு சைவத்தையும் தமிழையும் இருகண்களாகப் போற்றி வருவது தருமையாதீனம்.

**கடமை உணர்ச்சி :**

எல்லா நெறிகளையும் எல்லா மதத்தினரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். மனம் என்ற ஒன்று இருப்பதால் தான் மனிதன் என்ற பெயர் வந்தது. சிந்திக்கவும் சிரிக்கவும் தெரிந்தவன் மனிதன். சிந்திக்கத் தெரிந்தவன் என்ற முறையில் பொறுப்பையும் கடமையையும் உணரவேண்டும். நான் சென்ற ஆண்டிலே இருந்த நிலைவேறு ; இப்போதுள்ள நிலைவேறு இடமாற்றம் மட்டும் அல்ல. பொறுப்பும் அதிகம்

மிருகத்திற்குப் பொறுப்பு என்பது இல்லை. மனிதனுக்கு அப்படி மிக இல்லை. பொறுப்பு அதிகம். மனிதனுக்கு ஆறுவது அறிவாகப் பகுத்தறிவு இருக்கிறது; சிந்தித்துச் செயல்புரிவதற்குத்தான் இந்தப் பகுத்தறிவு. பகுத்தறிவால் சமய உணர்வு ஏற்படுகிறது. சமயலட்சியத்தை உணர்ந்த மக்கள் இருப்பதால்தான் கடவுள் உண்டு; நன்மைஉண்டு; தீமைஉண்டு என்ற எண்ணம் உடையவர் இருப்பதால்தான் மக்கள் அமைதியுடன் வாழ்கிறுர்கள். சமயம் இல்லாவிடில் மக்கள் அமைதியுடன் வாழமுடியாது. இத்தகைய நல்ல பல கருத்துக்களைக்கொண்ட சமயமும் சமய நெறியைப் பின்பற்றுவோரும் இருப்பது ஆட்சியாளருக்கும் பெருந்துணையாக இருக்கிறது.

மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு உறுதுணையாயுள்ள சமயங்களின் கருத்துக்களைப் பலரும் அறிவதற்கு வாய்ப்பாக சமயப்பயிற்சி வகுப்பு நடத்தப்பெறுகிறது. சமயப்பயிற்சி வகுப்பிலே பயிற்சிபெறுவோர் தங்களது வாழ்க்கையையும் உயர்த்திக்கொண்டு, பிறர்வாழ்வையும் உயர்த்தவேண்டும் நம்மைப் பாராட்டி வளர்த்துப் படிக்கவைத்து மனிதனுக்கிய நம்

சிறுகதை

# "பூசை முடிந்தது ..."

செஞ்சொற்கொண்டல், புலவர்
திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.,

அன்று சிவராத்திரி. அமாவாசைக்கு முன் நாள் ஆதலால் வானம் எங்கும் இருள் கப்பிக் கிடந்தது. வானத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நட்சத்திரங்கள் தலைகாட்டிக் கொண்டிருந்தன.

களத்தில் வேலை முடித்து, ஆட்களுக்குக் கூலி போட்டுவிட்டு வீடு திரும்ப மணி இரவு ஏழுக்கு மேலாகிவிட்டது.

இயல்பாக எங்கள் சிற்றூர் இம்மாதிரி நாட்களில் இருள் வெள்ளத்தில் திளைத்திருக்கும்; மற்ற கிராமங்களுக்குக் கிடைத்திருக்கும், அரசினர் கருணை இன்னும் எங்கள் கிராமத்திற்குக் கிடைக்கவில்லை; ஆதலால் மின்ஒளி இன்னும் எங்கள் ஊர் எல்லைக்குட் புகவில்லை.

அமைதியாக ஓடிக் கொண்டிருக்கும் மண்ணியாற்றின் மூங்கில் பாலத்தைத் தாண்டி வீடு புகுந்தேன்.

கை கால்களைக் கழுவிக்கொண்டு, 'அரிக்கேன்' விளக்கின் சுடரைத் தூண்டி விட்டு, என் அறையின் மேசைமுன் அமைதியாக உட்கார்ந்தேன்.

திருவாசக நூல் மேசைமீது விரித்தபடியே இருந்தது, எடுத்தேன். சிவபுராணத்தின் சில வரிகளைப் படித்தேன்.

'ஐயா இருக்காங்களா?' என்ற குரல் வெளிப்புறமிருந்து வந்தது.

'செந்தில்! யார் அங்கே பார்!' என்று கூறிவிட்டு மீண்டும் திருவாசகத்தில் மூழ்கினேன்.

வெளியில் என் தம்பி யாருடனே மெல்லிய குரலில் பேசும் சொற்கள் அரை குறையாகச் செவிகளில் விழுந்தன.

'பெரிய ஐயா', 'பந்தநல்லூர்' என்ற வார்த்தைகள் மட்டுமே காதில் விழுந்தன ; இடையிடையே இருமும் ஓசை கேட்டது.

'பந்தநல்லூர் பசுபதி நாயனக்காரர் வந்திருக்கிறார் ; அபிராமிபுரம் கோயிலுக்குச் சிவராத்திரி பூசைக்கு வாசிக்க வந்தாராம் ; நாழிகையாகிவிட்டதால் முன்புறத்துத் தாழ்வாரத்தில் படுத்துக்கொள்ளுவதாகக் கூறுகிறார். விடியற்காலம் எழுந்து செல்லுவதாகக் கூறுகிறார்' என்றான் செந்தில்,

பசுபதி நாயனக்காரர் என்றதும் என் சிந்தனை சும்மா இருக்கவில்லை.

'அதனால் என்ன ? பெரியவரே ! நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்' - என்று கூறியபடியே வெளியே வந்தேன்.

வெளித் தாழ்வாரத்தில் நாயனக்காரர் துண்டைப் பக்கத்தில் சுற்றி வைத்துக்கொண்டு அடக்கமாக நின்றிருந்தார். வயதானவர்; எண்பதுக்குமேலிருக்கும். பற்கள் இல்லாத வாய், போலிப் பற்களைக் கட்டிக்கொண்டு பொய்த்தோற்றம் கொடுக்க விரும்பாத எளியவர் அவர். தலையில் வழுக்கை ; அரிக்கேன் விளக்கின் ஒளி அதில் நிழலாடியது. காதுகளில் கடுக்கன்; முழங்காலளவிற்குக் கட்டிய வெள்ளாடை, பக்கத்தில் இரண்டு இளைஞர்கள். பக்கவாத்தியம் வாசிப்பவர்கள்.

'சின்ன ஐயா'ங்களா ? சௌரியங்களா ?

'ஆம் ; அதிருக்கட்டும், இந்த வயதில் அபிராமிபுரத்துக் கோயில் வழிபாட்டிற்கு இரவில் வராமல் இருக்கக்கூடாதா பெரியவரே !'

என் வினவில் இருந்த கருணையும் பரிவும் அவர்க்கு ஆறுதல் அளித்திருக்கக் கூடும். ஆனால், அவர் தந்த பதில் என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டது,

'அறுபது வருசத்துக்கு மேலாக ஆண்டவனுக்குத்தொண்டு செஞ்சதேகங்க இது அதுவும் இன்னைக்கு சிவராத்திரி, அபிராமிபுரத்து அம்பிகைக்கும் ஆண்டவனுக்கும் என் காணிக்கையைச் செலுத்தாம இருக்க என் மனசு இடந்தரலை'ங்க. என் அப்பன் - அவன் தந்த தெய்விகக் கலையை என் மூச்சுப் போற வரைக்கும் அவன் சந்நிதியிலே அரங்கேத்தறதுதான் என் நோக்கங்க, சின்னஐயா'

தொடர்ந்து பேசிய நாயனக்காரர்க்கு மூச்சு வாங்கியது, கண்களில் நீர்த்துளிகள் ; அபிராமி அன்னையை மானசீகமாகக் கண்டு அனுபவிக்கும் அரை வடிவில் திறந்த கண்கள், அவரின் உறுதியை, பழுத்த அந்த உடம்புக்குள் இருந்த பக்தி வெறியை, உணர்ந்தபோது என் உள்ளம் சிலிர்த்தது. தம்முடைய உயர்ந்த இலட்சியத்தை உணர்ந்துகொண்ட பெரியவர் அவர். சம்பாதிக்கும் வருமானத்துக்குத் தொழில் செய்வதாக நினைக்கும் பிறர் எங்கே, தொழிலைத் தொண்டாக நினைக்கும் இத் தூயவர் எங்கே என்று என் அறிவு கேட்டது.

'உட்காருங்கள் பெரியவரே, சிற்றுண்டி சாப்பிடலாமா? சிவராத்திரி விரதங்கள் தாம் எல்லோர்க்கும்? என்றேன்.

'வேண்டாங்க, குருக்கள் ஐயாகூட வற்புறுத்தினுங்க. நான் இன்னைக்கு, ஒண்ணும் சாப்பிடறதில்லைங்க', அறுவது வருசப் பழக்கம்' என்றபடி உட்கார்ந்து கொண்டார் பெரியவர், இளைஞர் களும் உட்கார்ந்து கொண்டனர். நான் மெல்ல வீட்டின் உட் புகுந்து மீண்டும் திருவாசகத்தை எடுத்தேன்,

" கள்ளப்புலக் குரம்பை
கட்டழிக்க வல்லானே "

என்ற வரியிலேயே என் மனம் நின்றது; அப்பால் நகர மறுத்தது.

அப்பா வரும் ஓசை கேட்டது; திருச்சிற்றம்பலம் சென்று சிவராத்திரி முதல் கால வழிபாட்டை முடித்துக்கொண்டு வருகிறுர். 'சிவாயநம' என்னும் ஓசையும் தொடர்ந்து ஊஞ்சலில் உட்கார்ந்து தேவாரப் பாட்டுக்களைத் தமக்கே கேட்கும் முறையில் மெல்லச் சொல்லும் சொற்களும் காதில் விழுகின்றன.

செந்தில், பசுபதி நாயனக்காரர் வருகையையும், வெளித் தாழ்வாரத்தில் படுத்துக் கொண்டுள்ளமையையும் அப்பாவிடம் சொல்கிறுன் !

'அப்படியா? ஏதாவது சாப்பிடச் சொன்னீர்களா?' என்ற அப்பாவின் கேள்விக்கு விடையாக. 'சொன்னேம்! சிவராத்திரி நோன்பு; ஒன்றும் சாப்பிடவில்லை' என்று கூறிவிட்டார்' என்று சொல்லிக்கொண்டே வெளியில் வந்தேன்.

'பால் காய்ச்சி வைத்திருக்கிறேன்; கொண்டு வரட்டுமா ?' என்ற இனிய மெல்லிய சொற்கள் சன்னல் அப்புறமிருந்து வருகின்றன; என் துணைவி கேட்கிருள் ;

'இதோ வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே வீட்டின் உட்கட்டிற்குப் போகின்றேன்.

வெளிப்புறம் ஏதோ காரியமாக வெளியில் சென்ற செந்தில் பரக்கப் பரக்க உள்ளே ஓடி வருகிருன். " அப்பா! அப்பா நாயனக்காரருக்கு ஒருமாதிரியாக இரைக்கிறது ; திணறுகிருர் "

நானும் அப்பாவும் எல்லோரும் வெளித் தாழ்வாரத்திற்கு விரைவாக ஓடிவருகிரேம். அண்ணாந்து பார்த்தபடிப் படுத் திருக்கும் கிழவரின் கண்கள் அரைத் தூக்க நிலையில் மூடியிருக் கின்றன ; விலா எலும்புகள் இயந்திர கதியில் இழுபடுகின்றன. குனிந்து பார்க்கின்றேன், அவருடைய உதடுகள் 'சர்வேசுவரா' என்ற வார்த்தையைக் கூறுவது மெல்லக் காதில் விழுகின்றது. பக்கத்துத் தேநீர்க் கடைக்குப் போயிருந்த இளைஞர்கள் ஓடி வருகிருர்கள். 'என்ன இப்படி' என்று எல்லோர்க்கும் துன்பம். தண்ணீர் கொண்டு வருகிருர் அம்மா. அப்பா வாங்கி நாயனக் காரர் உதடுகளின் அருகே கொண்டு போகிருர்.

'நாயனக்காரரே ! வாயைத் திறங்கள்'

அவரது மூடிய கண்கள் ஒரு நொடிப்பொழுது பிரிந்து மூடுகின்றன. இதழ்களில் புன்னகை – ஆம்; சிவராத்திரிக் கடமையைக் காணிக்கையாக்கிவிட்ட நிறைவாக இருக்கும் – நெளிகிறது. மூச்சு நின்று விடுகின்றது. தண்ணீர் கடை வாயில் வழிகின்றது ; விலா எலும்புகள் அமைதி நிலைக்கு வந்து விடுகின்றன.

இளைஞர்கள் 'ஐயோ, தாத்தா ! தாத்தா !' என்று புலம்பு கின்றுர்கள்.

'எல்லாம் வல்ல இறைவனின் பூசைக்கு வாசிக்கவென்றே அவர் வந்தார் ; பூசை முடிந்தது : போய்விட்டார்' என்கின்றுர் அமைதியாக என் தந்தை; 'சிவாயநம' என்று தம் வழக்கப் படியே கூறிய அவர் திருநீற்றை எடுத்து நாயனக்காரர் நெற்றி யில் பூசுகின்றுர். தலைப்பக்கத்து மாடத்தில் அகல் விளக்கை ஏற்றி வைக்கின்றேன் நான்.

பந்தநல்லூர் அங்கிருந்து இரண்டு மைல். அங்கிருந்து மாட்டு வண்டியில் நாயனக்காரரின் உறவினர் ஒருமணி நேரத்தில் 'பெட்ரோமாக்ஸ்' விளக்குடன் வந்து சென்றதோ, அவர்களின் அழுகை ஓசையோ, சற்று முன் வரை அவருடன் இருந்து பூசை முடித்துவந்த குருக்களின் துயரப்புலம்பலோ என் செவிகளில் விழவில்லை.

மீண்டும் திருவாசகத்தில் மூழ்குகிறேன் நான்.

'நள்ளிருளில் நட்டம்
பயின்றாடும் நாதனே'

வெளியில் நோக்குகிறேன். எங்கும் பேரிருட்டு கங்குற் போர்வையில் எங்கள் சிற்றூர் கண்மூடிக் கொண்டிருக்கின்றது. கழுவி முடித்த பிறகு வாசல் ஓரத்தில் அப்பா உட்கார்ந்து இரண்டாம் காலப்பூசை தொடங்கும் காட்சி கண்ணில் படுகிறது; மணி ஒலிக்கிறது,

---

## ஆடிமாதம் விசேஷ தினங்கள்


### 16–7–72 முதல் 15–8–72 முடிய

| | |
|---|---|
| 16—7—72 | தக்ஷிணாயன புண்யகாலம். ஆடிப்பண்டிகை |
| 17—7—72 | தருமை 20ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் குருபூஜை. |
| 23—7—72 | பிரதோஷம் |
| 25—7—72 | பௌர்ணமி மாதபூஜை |
| 2—8—72 | பதினெட்டாம்பெருக்கு |
| 3—8—72 | வேலூர்க் கிருத்திகை. புகழ்ச்சோழ நாயனார், மூர்த்தி நாயனார் திருநக்ஷத்திரம். |
| 6—8—72 | பிரதோஷம். கூற்றுவ நாயனார் திருநக்ஷத்திரம் |
| 8—8—72 | ஆடி அமாவாசை. திருவையாற்றில் அப்பர் சுவாமிகளுக்கு கைலாசக்காக்ஷி. தருமை 25 ஆவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கயிலைகண்ட நாள் |
| 11—8—72 | ஆடிப்பூரம் |
| 14—8—72 | தருமையில் ஆவணிமூல உற்சவ ஆரம்பம் |
| 15—8—72 | சுதந்திர தினம். சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் திருநக்ஷத்திரம். |

தருமையாதீனம், திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்



தமிழ்நாடு ஆளுநர்
மேதகு. திரு. கே. கே. ஷா அவர்கட்கும்
தமிழ்நாடு அரசு முதலமைச்சர், டாக்டர் கலைஞர்
மாண்புமிகு. திரு. மு. கருணாநிதி அவர்கட்கும்
பிரசாதம் வழங்கல்.



தமிழ்நாடு ஆளுநர்
மேதகு. திரு. கே. கே. ஷா அவர்களையும்
தமிழ்நாடு அரசு முதலமைச்சர், டாக்டர் கலைஞர்
மாண்புமிகு, திரு. மு. கருணாநிதி அவர்களையும்
தேவஸ்தானச் சார்பில் வரவேற்றல்.

தருமையாதீனம் ஆவணிமூலவிழாவில்
(1967)



25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்
திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கட்கு
'சைவம் பெருக்கும் சீலர்' என்னும் பட்டம் வழங்கியருளல்.

# சைவப் பெரியார் மறைவு

சைவப் பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தமது எண்பத்தைந்தாவது வயதில் மறைந்தமை, தமிழ்நாட்டிற்கும், பொதுவாக சமய உலகத்திற்கும், சிறப்பாகச் சைவ உலகத்திற்கும் பேரிழப்பாகும்.

திரு. பிள்ளை அவர்களின் தந்தையார் சச்சிதானந்த சுவாமிகள் என்ற பெரியாருடன் தாம் கொண்டிருந்த ஆன்மீகத் தொடர்பு கருதி திரு. பிள்ளை அவர்களுக்கு இப்பெயரை இட்டார்கள். நிறைகல்வியும், நல்லொழுக்கமும், சைவ சமயத்தில் பேரீடுபாடும், பொதுவாழ்வில் நெருக்கமான இணைப்பும் கொண்டிருந்த பிள்ளை அவர்கள் ஆற்றிய சமய - சமுதாயப் பணிகள் அளப்பில.

கல்வித்துறையில் நெடுநாள் உழைத்துத் துணை இயக்குநர் பதவிக்கு உயர்ந்தார்கள். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பதிவாளராக இருந்து சிறக்கப் பணிபுரிந்தார்கள்.

" கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு "

என்ற குறள்வழிநின்று சமுதாயத்திற்கு நலம் விளைக்கும் செயல்கள் யாவற்றிலும் ஈடுபட்டு, உயர்வு தாழ்வு பாராட்டாது பெரும் பணியாற்றிய சான்ருேர் திரு. பிள்ளை அவர்கள்.

அப்பர் பெருமானைப்போல எண்பது வயது கடந்து சீலத்தாலும், கோலத்தாலும் முதிர்ந்த இல்லறத்துறவியாக விளங்கிய, திரு. பிள்ளை அவர்கள் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளிடம் சிவபூஜை எடுத்துக்கொண்டவர்கள், திரு. கோபால கிருஷ்ண கோகலே அவர்களால் வடநாட்டில் தோற்றுவிக்கப்பட்ட வார வழிபாட்டுக் கழகத்தைத் தமிழ் நாட்டில் தோற்றிப் பரவச்செய்த சிறப்பு இவர்களுக்கே உரியது.

உலகில் பெரும்பாலோர் அரசாங்க அலுவல்கள் கிடைக்கவில்லை என்ருல் கல்விப் பணிகளுக்குத் திரும்புவர். திரு. பிள்ளை அவர்களோ, தகுதிவாய்ந்த அரசாங்கப் பணியை உதறிவிட்டுக் கல்விப் பணியில் ஈடுபட்டார்கள். ஆங்கிலத்தில் பேசுவதும், எழுதுவதுமே பெருமை என்றிருந்தகாலத்தில் நிறைந்த ஆங்கில அறிவு பெற்றிருந்தும் துணிச்சலோடு தமிழிலேயே பேசவும்,

எழுதவும் வேண்டுமென்ற உறுதிபூண்டு அவ்வழிநின்ற இவர்கள், திரு. மறைமலை அடிகளார், திரு. வி. க. முதலிய சான்றோர்களோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்கள். சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் தூண்களில் ஒருவராக விளங்கி, அருந்தொண்டாற்றிய இவர்கள் பாம்பன் சுவாமிகளைத் தமது குருவாகக் கருதினர்கள்.

இந்து தரும பிரசார சபையை நிறுவிய இவர்கள் குடிசைப் பகுதிகளில் எல்லாம் சென்று சைவ சமயப் பிரசாரம் செய்து சைவப் – பாதிரியார் எனப் போற்றப்பெற்றார்கள். தருமபுரம், மதுரை, குன்றக்குடி, காஞ்சி முதலிய திருமடாலயத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களுடன் நெருக்கமான தொடர்புகொண்டு சமயப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

இவர்களுடைய செயற்கருஞ் சிறப்புமிக்க சைவ சமயப்பணிகளைப் பாராட்டும் முகத்தானும், இளைஞர்களைச் சமய ஆர்வத்தில் உருவாக்கவும் தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் 1967-ல் நிகழ்ந்த ஆவணி மூலப் பெருவிழாவில் 'சைவம் பெருக்கும் சீலர்' என இவர்களுக்குப் பட்டம் வழங்கிப் பொன்னுடை போர்த்திப் பொற்பதக்கம் வழங்கி ஆசீர்வதித்தார்கள்.

கல்விபோதனையானது, தெய்பக்தியாலும், நல்லொழுக்கத்தாலும் ஆழ்ந்தவேர்விட்டிருக்கவேண்டுமென்று கருதிய திரு. பிள்ளை அவர்கள் சதாபிஷேகம் கொண்டபோது, அப்பர் பெருமான் போல் பிறர்க்குப் பயன்படும் பெருவாழ்வு மேற்கொண்டிருந்த இவர்களைச் சிறப்பிக்கக் கருதி, தற்போது தருமையாதீன ஞான பீடத்தில் அருளரசு செலுத்திவரும் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சென்னை — சமயப் பிரசார நிலையப் பொறுப்பேற்றிருந்த போது தாமே அமைப்பாளராக இருந்து, பொள்ளாச்சி தொழிலதிபர். திரு. நா. மகாலிங்கம் அவர்களைத் தலைவராகக் கொண்டு, 'சச்சிதானந்தம் பிள்ளை சதாபிஷேக நினைவு நிதி'க் கமிட்டி ஒன்றை அமைத்து ரூபாய் 40 ஆயிரம் வரை திரட்டினர்கள்.

தற்போது திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் நினைவு நிதியாக வசூலாகியிருந்த தொகையோடு, சுமார் 60 ஆயிரம் ரூபாய் வரை தாமே வழங்கி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கூடுதல் தொகை ரூபாய் 1 லட்சம் மூலதனம் வைத்து சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தில் 'அப்பர் குருகுலம்'

நிறுவி, ஏழை மாணவர்களுக்கு சமய ஒழுக்கமும், தேவார இசைப்பயிற்சியும் நல்குவதோடு உயர்பள்ளிக் கல்விபெற இலவச உணவும் — உறையுளும் வழங்க அருள்பாலித்திருக்கிறார்கள்.

திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் சதாபிஷேக நினைவு 'அப்பர் குருகுலம்' அவர்களுடைய ஒப்பற்ற சமய - சமுதாயப்பணிகளுக்கு தலைசிறந்த நினைவுத்தூணாக இருந்து பெருமை சேர்க்கும் என்பது திண்ணம்.

திரு. பிள்ளை அவர்களின் ஆன்மா இறைவன் திருவடிகளில் இரண்டறக்கலந்து இன்புறவும், அவர்கள் மறைவால் ஆறாத் துயர் கொண்டிருக்கும் குடும்பத்தார் துயர் நீங்கி அமைதி பெறவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

---


## தமிழ்நாடு தெய்விகப் பேரவை

# "அருளோசை"

(சமய பாடபோதனை திங்களிதழ்)

பேரவைத் தலைவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள், "திருவளர் செல்வனுக்கு" என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதுவார்கள். மற்றும், சமயச் சான்றோர்களின், வரலாறுகள், அருட் பாடல்களுக்கு விளக்கங்கள், மேலை கீழை நாட்டுத் தத்துவ ஒப்பிட்டு விளக்கங்கள், சான்றோர்களின் அறவுரைகளுடன் வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் தாள்கள் இணைக்கப்பட்டு வெளிவரும்.

இன்றே உறுப்பினர் ஆகுக!

ஓராண்டு உறுப்பினர் கட்டணம் ரூ. 3—00.

முகவரி :— ஆசிரியர், "அருளோசை" நெ. 9, மகாராஜா சூரியராவ்சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 18.

# தியானப்பயிற்சியால் பயன் உண்டா?

## அமெரிக்க வைத்திய நிபுணர்கள் ஆராய்ச்சி

இறைவனடி சார்ந்து பிறவிப் பெருங்கடலைக் கடக்கத் துணை செய்யும் அரிய சாதனம் என்று தியானப் பயிற்சியை இந்திய யோகியர் கருதுவர்; இறைவனையோ, பிறவிப் பெருங் கடலையோ, அதைக் கடப்பது அவசியமென்பதையோ நம்பாத மேனாட்டு வைத்திய நிபுணர்கள்கூட தியானப் பயிற்சி உடலுக்கும் உள்ளத்துக்கும் நல்லது என்று சோதனைச் சாலைகளில் நவீன முறைகளில் ஆராய்ந்து முடிவு செய்திருக்கிறார்கள்.

தியான நிலை என்பது உடலில் மாறுதல்களை உண்டு பண்ணுகிறதா என்பதைக் கடந்த 2 வருஷமாக அமெரிக்க ஹார்வர்ட் சர்வகலாசாலையைச் சேர்ந்த இருவைத்திய நிபுணர்கள்-டாக்டர் ராபர்ட்வாலஸ், டாக்டர் ஹெர்பர்ட்பென்ஸ்- ஆராய்ந்து பார்த்தனர். 'தியானத்தால் அளவு மீறிய இரத்த அழுத்தம் தணிகிறது. நரம்புகளின் பதட்டம் நீங்குகிறது. உடலிலும் உள்ளத்திலும் அமைதியும் இளமையும் வளம் பெறுகின்றன' என்று பரிசோதனைகள் மூலமாக நிரூபித்துப் பார்த்துவிட்டனர்.

பலவித தியான முறைகள் இருக்கின்றன. இவையனைத்தும் ஒரே அளவில் பயன் அளிப்பவைதானா என்பதையும் அந்த டாக்டர்கள் ஆராய்ந்தனர். சம்பிரதாயமான இந்திய யோகப் பயிற்சிகளையும் ஜப்பானில் உள்ள "ஜென்" தியான முறை என்பதையும், மஹரிஷி மஹேசயோகி சமீப காலத்தில் மேனாட்டில் பரப்பிய 'பரதியான' முறையையும் ஒப்பிட்டு ஆராய்ந்தனர். முன்னிரு முறைகளும் நீண்ட காலம் பயில வேண்டியவையாக உள்ளன என்றும், 'பர தியான' முறை சில நாட்களில் கற்றுக்கொண்டு பயன் அடையத் தக்கதாக உள்ளது என்றும் கூறினர்.

இரத்த அழுத்த நோயாளிகளுக்கு 'பர தியான' முறை விரைவில் நற்பயன் அளிக்கும் என்றும், விண்வெளிப் பயணத்திலும், பிராணவாயு உள்ளிழுப்புக் குறைய வேண்டிய சில நோய்களிலும் இந்தத் தியான முறை குணம் அளிக்கும் என்றும் கூறினர்.

— *தினமணி* 8—7—72.

# திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

( மலர் 31, இதழ் 6, பக்கம் 342 - இன் தொடர்ச்சி )

**நான்காவது குறள்**

> " ஊன்உயிரால் வாழும் ஒருமைத்தே, ஊனுடுயிர்
> தான் உணர்வோ டொன்றுந் தரம் "

எனவரும்.

இதன் பொருள் :- ஊனுடு உயிர் — உடம்போடு கூடிநிற்கின்ற உயிர் ; தான் உணர்வோடு ஒன்றும் தரம் - தான் அறிவு வடிவான திருவருளோடு கூடி வாழும் நிலை ; ஊன் உயிரால் வாழும் ஒருமைத்து - உடம்பு உயிரோடு கூடி வாழும் ஒற்றுமையோடு ஒப்பதாகும்.

விளக்க உரை :- " ஊன் " இரண்டும் உடம்பைக் குறித்த ஆகுபெயர்கள். " உயிரால் " என்பதில் ஆல் உருபு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. உடம்பு உயிரோடு கூடி வாழ்தலாகிய உவமை, 'வாழ்தல்' என்னும் தொழிலும், 'ஒருமை' என்னும் பண்பும் பற்றிவந்தது. எனவே, 'உடம்புநிலைபெறுதற்கு உயிர் இன்றியமையாததுபோல, உயிரினது அறிவு விளக்கத்திற்குத் திருவருள் இன்றியமையாதது' என்பதும், 'உயிர் உடம்பில் வேற்றுமையின்றித் தான் அதுவேயாய்க் கலந்து நிற்றல் போலத் திருவருள் உயிரின்கண் வேற்றுமையின்றித் தான் அதுவேயாய்க் கலந்து நிற்கும்' என்பதும் பெறப்பட்டன. இருபொருள் இவ்வாறு பிரிப்பின்றிக் கலந்து நிற்றலே வடமொழியில் 'அத்துவிதம்' எனப்படுகின்றது. 'அத்துவிதம்' என்பதன் பொருளை, 'அந்நியம் இன்மை, அநந்நியம், வேறின்மை' முதலிய சொற்களால் விளக்குவர் அறிந்தோர்.

இதனால், 'உயிர்க்குத் திருவருளது துணை எப்பொழுதும் இன்றியமையாதது' எனவும், 'அத்துணைதான் உயிரினிடத்து எப்பொழுதும் பிரிப்பின்றி உடனாய் உள்ளது' எனவும் உணர்தல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

### ஐந்தாவது குறள்

" தன்னிறமும் பன்னிறமும் தானுங்கல் தன்மைதரும்
பொன்னிறம்போல் மன்னிறம்இப் பூ "

எளவரும்.

இதன் பொருள் :- மன் நிறம் இப் பூ - இறைவனது திருவருள் இவ்வுலகில் நிற்கும் முறைமை ; தன் நிறமும் பல் நிறமும் தான் ஆம் கல் தன்மை தரும் பொன் நிறம்போல் - தனது நிறத்தையும் பிற பொருள்களின் நிறத்தையும் தன்னிடத்தே காட்டி நிற்கின்ற பளிங்குக் கல்லிற்கு அவ் இருதன்மையையும் கொடுக்கின்ற பகலவனது ஒளியின் முறைமைபோல்வதாம்.

விளக்க உரை :- அஃதாவது, 'சார்ந்ததன் வண்ணமாகின்ற உயிர்கள் பாசத்தைச் சார்ந்து அவற்றின் தன்மையே தன் தன்மையாகக் காட்டி நிற்கின்ற பெத்த நிலையும், உயிர் பாசங்களின் நீங்கித் தன்னை வேருகக்கண்டு தன் இயல்பை உணர்கின்ற முத்தி நிலையும் ஆகிய இரண்டினையும் உயிர்கட்குத் தருவது இறைவனது திருவருளே' என்றவாறு. 'இது, சார்ந்ததன் வண்ணமாகின்ற பளிங்குக் கல் பிற பொருளின் நிறத்தைத் தன்னிறமாகக் காட்டி நிற்றல், பிறபொருளோடு சேராது தனது நிறத்தைக் காட்டி நிற்றல் என்னும் இரண்டும் பகலவனது ஒளி இல்லாதபொழுது இயலாமை கொண்டு அறியப்படும்' என்பது உவமையால் உணர்த்தப்பட்டது.

" கல் " என்றது 'பளிங்குக்கல்' என்பது, அதற்குக் கூறப்பட்ட அடைமொழிகளால் விளங்கும். பொன் - பகலவன். மன் - தலைவன் ; இறைவன். நிறம் - ஒளி ; திருவருள். பூ - பூமி; உலகம். 'பூவின்கண்' என்னும் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. 'பூவின்கண் மன்நிறம்' என்பதை, 'பறம்பின்கண் பாரி' என்பதுபோலக் கொள்க.

இதனால், 'உயிர்கட்குப் பெத்தம், முத்தி இரண்டனையும் தருவது திருவருளே' என அறிதல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

### ஆருவது குறள்

" கண்தொல்லை காணும்நெறி கண்ணுயிர் நாப்பண்நிலை
உண்டில்லை அல்ல தொளி "

எளவரும்.

இதன் பொருள் :- கண் தொல்லை காணும் நெறி கண் உயிர் நாப்பண் ஒளி நிலை உண்டு கண் தொன்றுதொட்டுப் பொருளைக் கண்டுவரும் முறைமை, கண்ணிற்கும், உயிருக்கும் இடையே ஒளி நிற்றலால் உளதாவது. அல்லது இல்லை - ஒளி அவ்வாறு நில்லாவிடின், கண் காணுதல் இல்லையாம்.

விளக்க உரை :- "ஒளி" என்பதனை, "நிலை" என்றதற்கு முன்னே கூட்டி, மூன்றுவது விரித்து, 'ஒளி நிலையால் உண்டு' என உரைக்க. 'உயிர் தொன்றுதொட்டு உலகியலை அறிந்து வருகின்ற முறைமை, கருவி கரணங்கட்கும், உயிருக்கும் இடையே திருவருள் நிற்றலால் உளதாவது; திருவருள் அவ்வாறு நில்லாவிடின், உயிர் அறிதல் இல்லையாம்' என்னும் பொருளைத் தோற்றுவித்து நிற்றலால், இக்குறள் ஒட்டணியாய் நின்றது. பெத்த நிலையை இவ்வாறு விளக்கியதனுனே, முத்தி நிலையிலும் உயிர்க்குத் திருவருளின் துணை இன்றியமையாததாதல் அறிந்து கொள்ளப்படும்.

இதனுல், முன்னைக் குறளில் கூறிய பொருள், உவமை முகத்தால் வலியுறுத்தப்பட்டது.

## ஏழாவது குறள்

> "புன்செயலின் ஓடும் புலன்செயல்போல் நின்செயலை
> மன்செயல தாக மதி"

எனவரும்.

இதன் பொருள் :- புன் செயலின் ஓடும் புலன் செயல்போல் - சிற்றின்பப் பொருள்களின்மேல் செல்கின்ற ஐம்பொறிகளது செயல் அப்பொறிகட்கு முதலாகிய உயிர்களின் செயலேயாய் இருத்தல்போல; நின் செயலை மன் செயலதாக மதி - உனது செயல்களை எல்லாம் உனக்கு முதலாகிய திருவருளின் செயல் என்றே அறிவாயாக.

விளக்க உரை :- "புன் செயல்" என்பதில், பயனது புன்மை அதற்கு ஏதுவாகிய செயல்மேல் ஏற்றப்பட்டது. "புலன், மன்" என்பன ஆகுபெயர்கள். முன்னைக் குறளிற் கூறிய உவமை, திருவருள் அறிவிக்கும் துணையாதற்கும், இக்குறளில் கூறிய உவமை திருவருள் அறிவித்தலேயன்றி அறிதல் துணையுமாதற்கும் கூறப்பட்டன என்க. திருவருள் உயிருக்கு அறிவித்தும், உயிரின் பொருட்டுத் தான் அறிந்தும் நிற்கும் என்பதை மெய்கண்ட தேவர்,

" விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்(கு)
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமி " * (1)

எனவும்,

" காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின் " † (2)

எனவும் விளக்கியருளினர்.

இதனல், திருவருளின் துணை இன்றியமையாமை வேறும் ஓர் சிறப்பு உவமையால் வலியுறுத்தப்பட்டது.

(தொடரும்)

* (1) சிவஞானபோதம் - சூ. 5.
† (2) ,, - சூ. 11.

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

**ஸ்ரீ கம்பஹரேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.**

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் தங்களது 25வது ஆண்டு 20வது ஆதிவார வழிபாடு இன்று 14—5—72 காலை 10 மணியளவில் திருவருட்டுணைகொண்டு சிறப்பாக நடைபெற்றது. ஆலயத் திருவுருவங்கள், நல்ல முறையில் அலங்கரிக்கப்பெற்று காட்சியளித்தன. ஆலயத்துள் எந்த இடமும் மிகவும் துப்புரவாக இருந்தமை மிகச் சிறப்புடையது. இச் சிறப்புக்கள் அனைத்துமே திருத்தருமைஆதீனக் கோவில்கள் எல்லாம் பெற்றுற்ற சிறப்பு இயல்புகள். ஆலயச் சூப்ரண்டெண்ட் அவர்களும் மற்ற அலுவலர்களும் வழிபாட்டில் அடியார்களுடன்கலந்து வழிபட்டது பாராட்டுக்குரியது. இத்துணைக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது அருளாட்சியே காரணமாக விளங்குகிறது. அதிலே ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது பொன்னர் திருவடிகளுக்கு அடியார்கள் தங்களது உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துகொள்ளுகிறார்கள்.

(Sd.) அ. சுந்தரேசன்,
14—5—72. திருக்குடந்தை சிவனடியார் திருக்கூட்டம்.

# திருமந்திரம்-மூலமும் உரையும்

திருக்குறள்வேள்,
திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 31. இதழ் 6. பக்கம் 346 இன் தொடர்ச்சி)

## 15. தானச் சிறப்பு

250 ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே.

ஆர்க்கும் இடுமின் - யாவராயினும் கொடுங்கள். அவர் இவர் என்னன்மின் - அவர் உயர்ந்தோர் இவர் தாழ்ந்தோர் என்று கருதாதீர். பார்த்திருந்து உண்மின் - வருவிருந்து பார்த்திருந்து உண்ணுங்கள். பழம்பொருள் போற்றன்மின் - பழமையான பொருளாயிற்றே என்று பாதுகாக்காதீர்கள். வேட்கை யுடையீர் - இம்மை மறுமையில் விருப்பம் உடையவரே! விரைந்து ஒல்லை உண்ணன்மின் - தனியே விரைந்து ஒல்லை உண்ணவேண்டாம் காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே - காகங்கள் உண்ணுங் காலத்தில் பிற காகங்களை அழைத்து உண்ணுவதை அறியுங்கள்.

பார்த்திருத்தல் - செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருத்தல்.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" —திருக்குறள்-36

பழமையைப் போற்றுமையாவது, அருமை யுடைத்தென்று பாதுகாவாமை. உண்ணும் காலம் அறிதல் - பிறரையும் அழைத்து உண்ணவேண்டுமென்று அறிதல்.

பிறருக்குக் கொடுத்து உண்ண வேண்டும்.

## 16. அறஞ்செய்வான் திறம்

251 தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சில தத்துவ ராவர்கள்
தாமறி வார்க்குத் தமர்பர னாமே.

தாமறிவார் அண்ணல் தாள் பணிவாரவர் - தம்மை அறிவார் இறைவன் திருவடியை வணங்குபவராவர். தாமறிவார் அறந்தாங்கி நின்றாரவர் - தம்மை அறிபவரே அறஞ்செய்யும் நெறியில் நின்றவராவர். தாமறிவார் சில தத்துவராவர்கள்- தம்மை அறிபவரே உண்மையை உணர்பவராவர். தாமறிவார்க்குத் தமர் பரனாமே - தம்மை அறிவார்க்கு இறைவனே உறவினனாக உள்ளான்.

தம்மை அறிதலாவது, தாம் பரனாதல் தன்மையுடையோம் என்றறிதல். அறமாவது, மனத்தால், வாக்கால், செயலால் புரியும் அறம்.

அண்ணலைப் பணிந்து அறஞ்செய்வார் பரனுக்கு உறவாவர். 1

252 யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை - உண்ணுவதற்கு முன்னே இறைவனுக்குப் பச்சிலை கொண்டு பூசித்தல் யாவர்க்கும் ஆகும். யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை - அவ்வாறே பசுவுக்கு ஒரு வாயளவு புல் கொடுத்தல் யாவர்க்கும் ஆகும். யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி - அதேபோல் உண்பதற்கு முன்னே சிறிதளவு பிறர்க்குக் கொடுத்தல் எளிமையாகும். யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே - இல்லையெனில் பிறர் மனம் நோவாதவாறு இனிமையாகப் பேசுதல் யாவர்க்கும் ஆகும்.

பச்சிலை - வில்வம் முதலிய பத்திரங்கள். வாயுறை - கைத்தீனி. கைப்பிடி - சிறு அளவு.

எல்லோரும் செய்யக்கூடிய எளிமையான அறம் கூறியவாறு.

253 அற்றுநின் றூருண்ணும் ஊணே அறனென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றாங்கொரு கூவற் குளத் தினிற்
பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே.

அற்று நின்றூர் உண்ணும் ஊணே அறன் என்னும் - இருவகைப் பற்றும் அற்றுநின்ற சிவஞானியர்க்கு அளிக்கும் உணவே அறம் என்று நூல்கள் கூறும். அங்ஙனமிருந்தும், கற்றன போதம் கமழ்பவர் மானிடர் - கல்வியால் உண்டான அறிவு விளங்கும் மனிதர்கள். உற்றுநின்று - பார்த்திருந்து. ஆங்கு ஒரு கூவல் குளத்தினில் பற்றிவந்துண்ணும் பயன் அறியாரே - கிணற்றங்கரையிலோ குளத்தங்கரையிலோ தங்கியுள்ள சிவ ஞானியரை அழைத்து வந்து உண்பிக்கும் பயன் அறிய வில்லையே!

அற்று நின்றூர் - அகப்புறப்பற்றில்லாதார். பற்றின்மையின் தாமே சென்று ஐயம் விரும்பாதவர் என்க.

"ஐயம் புகாமல் இருந்த தவசியார்
வையகம் எல்லாம் வரவிருந் தாரே" —மந்திரம் - 1891

பற்றற்ற ஞானியர்களை உண்பிப்பதே சிறந்த அறம். 3

254 அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
விழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே"

ஏழை நெஞ்சிரே - அறஞ்செய்யா உள்ளத்தை உடையோரே, அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர் - காமம் வெகுளி மயக்கமாகிய அழுக்கினை அகற்றி ஆன்ம அறிவைப் பெருக்கவில்லையே. தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர் - செல்வம் தழுவிய நாளில் அறமும் செய்யவில்லையே. விழித்திருந்து என் செய்வீர் - உலக நோக்கில் காலத்தைக் கழித்து என்ன செய்யப்போகின்றீர். வெம்மை பரந்து விழிக்க அன்று என்செய்வீர் - இவ்வுடல் அழிந்து எரியும்; அறஞ்செய்யாது காத்தவை என்ன ஆகும் என்று சிந்தியுங்கள்.

சிவத்தைப் பற்றிப் பொருட்பற்றைக் குறைத்து அறம் செய்யவேண்டும். 4

(தொடரும்)

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

( மலர் 31. இதழ் 6. பக்கம் 350 இன் தொடர்ச்சி )

**ஆண்டவனே நினைப்புமறப் பற்றவர்கள் அறிவூடு**
**தாண்டவஞ்செய் நிர்க்குணமே! தண்ணமிர்தே நறுந்தேனே**
**காண்டகுசீர் ஐயாற்றுக் கண்ணுதலே! வினையேற்கு**
**வேண்டுவதுன் அருளலது வேறொன்றும் வேண்டிலனே. (39)**

( இ - ள் ) ஆண்டவன் ஏ - என்னையாளாகக் கொண்டு ஆண்ட பெருமானே! நினைப்பு மறப்பு அற்றவர்கள் அறிவு ஊடு - நினைப்பும் மறதியும் அறவே நீங்கிய சிவயோகியர்கள் அறிவின்கண், தாண்டவம்செய் நிர்க்குணம் ஏ - ஞானக்கூத்தாடுதலைச் செய்தருளும் நிர்க்குணத்தன்மையானவனே!, தண் அமிர்து ஏ - குளிர்ச்சி பொருந்திய அமிழ்தமயம் ஆனவனே!, நறும்தேன் ஏ - நல்ல மணமுடைய கொம்புத்தேனுகியுள்ளவனே! காண்தகுசீர் ஐயாற்று கண்நுதலே - உள்ளும்புறம்பும் காணத்தகுந்த பேரருட் சிறப்பினையுடைய திருவையாற்று நுதல்விழி நாட்டத்து இறையவனே!, வினையேற்கு - நல்வினையற்ற தீவினையுடையேற்கு, (உரித்தாக) வேண்டுவது உன் அருள் - விரும்பப்படுவது தேவரீருடைய திருவருட்செயல் ஒன்றுமேயாம், அல்லது வேறு ஒன்றும் வேண்டிலன் ஏ - அஃது அல்லாமல் பிறிதொன்றினையும் வேண்டுகிலேன்; அத்திருவருள் பேற்றினையே கொடுத்தருள்க. ( எ - று )

( கு - ரை ) ஊடு - ஏழாம் வேற்றுமையுருபு, தாண்டவம் - கூத்து (ஞான நடனம்). இதனுலன்றோ எல்லாம்வல்ல இறைவன் ஆடல்வல்லான் எனத் திருப்பெயர் பூண்டுளன். நிர்க்குணன் - ஞான வடிவானவன், அமிழ்தமே, அமிருதம் என வாயது. உண்டவர்தம் இறப்பினைத் தவிர்ப்பது என்பது பொருள். வேண்டல் - விரும்பல்.

"நானே பிறந்து பயன்படைத்தேன் அயன் நாரணன்எங்
கோனே யெனத்தில்லை யம்பலத்தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகியென் றிமையெல்லா மறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே"

எனவரும் பதினோராந் திருமுறைப் பாடலும் சிந்திக்கத்தக்கது. நினைப்புமறப்பற்ற நிலை - சிவயோகநிலை. இந்நிலை நின்றவர்களே சிவயோக மாமுனி திருமூலர் முதலானோராவர். தாண்டவம் - படைப்பு, காப்பு அழிப்பு, மறைப்பு, அருளல் ஆகிய ஐந்தொழில்களை யாட்டுகந்து ஆடுவது. இதனைப் பஞ்சகிருத்திய பரமானந்தத் தாண்டவம் என்பது வடநூன் மரபு. ஆள்பவன் - சிவபெருமான். ஆளப்படுபவை உயிர்கள். ஆள்பவன் ஒருவன்; ஆளப்படுபவை பலவாம். இங்ஙனம் பலநெறிப்பட்ட ஐயாற்றிறையே எற்குஉயிர்க்குயிராய் நின்றருள் புரிகுவன் ஆகலின் வேண்டத்தக்கது அறிபவனாகிய ஆண்டவனை வேண்டியவாறு விண்ணப்பிக்கலாயினர்.

**இலைக்கேதம் எனக்குனருள் இனிதளிப்பின் அரவினிற்று**
**யிலைக்கேதம் இல்லாழி யீய்ந்தோயைந் நதித்தென்க**
**யிலைக்கேத லத்தீர்வந் துய்வீரென் பதுபோற்கோ**
**இலைக்கேத னங்களசைந் திலங்குபதிப் பெருமானே. (40)**

(இ-ள்) அரவினில் துயில் ஐக்கு ஏதம் இல் ஆழி ஈந்தோய் - ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாகிய நாகராசனைப்படுக்கையாக் கொண்டு அறிதுயில் கொள்ளும் தேவனாகிய புருடோத்தமனுக்குக் குற்றமில்லாத சுதரிசனம் என்னும் சக்கராயுதப் படையைக் கொடுத்தருளியவரே! ஐந்நதி - திருவையாறாகிய. தென் கயிலைக்கே - தென்கைலாயப்பதிக்கே, தலத்தீர் - பூதலத்தி லுள்ளவர்களே, வந்து உய்வீர் - அன்புடன் வந்து தரிசித்து உய்ந்து போவீர்களாக. என்பதுபோல் - என்று கூறுவதுபோல. கோயில் ஐ கேதனங்கள் திருக்கோயிலின்கண் கட்டப்பட்டுள்ள அழகிய துகில் கொடிகள், அசைந்து இலங்கு பதிப்பெருமான் ஏ-காற்றினால் அசைந்துகொண்டு விளங்குகின்ற பதியினையுடைய சிவபெருமானே: உன் அருள் - தேவரீருடைய திருவருளை, எனக்கு - ஏழையடியேற்கு. இனிது அளிப்பின் - இன்பமாக அளித்தருளின், கேதம் - பிறவித்துன்பம். இல்லை - இல்லையாம் என்றவாறு.

(கு-ரை) இல்லை என்பது இலை யென இடைக்குறையாய் வந்தது. கேதம் - துன்பம். அரவணையான் சிந்தித்து அரற்றும்

அடி, எனவரல் கொண்டு அரவினில் துயில் ஐ எனப்பட்டது. அரவணைப் பள்ளிகொண்டான் என்பதுமது. ஆழி - வட்ட முடையது சலந்தரனைத் தடிந்தது. இதனைப் பெறற்குத் திருமால் செந்தாமரை மலர் ஆயிரங்கொண்டு இறைவனை யர்ச்சித்து, ஒருநாள் எண்ணிக்கையில் ஒன்றுகுறைய, அதன் பொருட்டு, தாமரைக் கண்ணன் எனத் தனக்குப் பெயராதல் குறித்துத் தன் கண்ணைப் பிடுங்கி எண்ணை நிறைத்து அர்ச்சித் துச் சக்கரத்தைப் பெற்றார்.

"நாராயணன் பூவோராயிரத்தைக்
கரத்தாற் கொய்தோர் அரற்கே கொடுத்துச்
சக்கரச் சிறுமையின் நீங்கி நற்சுவைப்
பாற்கடற் கண்ணோ பள்ளிகொண்டான் எனக்
காரக முழுதும் வந்தன காண்க"

என்பது இலக்கணக் கொத்துரை. இவ்வரலாறு திருவீழிமிழலை யினிகழ்ந்தது என்பர். தலம் - பூமண்டலம். உய்தல் - கடைத் தேறல். கேதனம் - கொடி (ஆடையாலாய துகில்கொடி) இலங் குதல் விளங்கல். பெருமான் - பிறர்க்கில்லாத பெருமையுடைய வன். துகில்கொடி அழைப்பதுபோல் என்பது தற்குறிப்பேற் றவணியாம். (ஏ. விளி)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

**பெருமை சேரயன் மான்முதலோர்**
**தொழப் பேரருள் இனிதாகத்**
**தருமை யாறனை வணங்கியன்**
**னேன்புகழ் சாற்றிடின் மடநெஞ்சே!**
**இருமை யின்பமும் இறுதியில்**
**முத்தியும் எளிதினில் வந்தெய்தும்**
**எருமை யூர்தியும் அஞ்சுவன்**
**மற்றுனக் கினியொரு குறையுண்டோ. (41)**

(இ - ள்) பெருமை சேர் அயன் மால் முதலோர் தொழ - இரணியகருப்பன் எனப்பெறும் பெருமைசேர்ந்த பிரம தேவனும் திருமாலும் உள்ளிட்ட தேவர்களும் வணங்க, (அவர்கட்கு) பேர்அருள் இனிது ஆக தரும் ஐயாறனை - பேரருட் பெருக்கினை இனிதாகக் கொடுத்தருளும் திருவையாற்றுப் பரம்பொருளை, வணங்கி - மனமொழி மெய்களால் சிந்தித்து

வாழ்த்தி வணங்குதலைச் செய்து அன்னேன்புகழ் - அப்பெருமானின் திருப்புகழினை, சாற்றிடின் - பலர் அறிந்துய்யுமாறு சாற்றுவாயேயானால், மட(ம்)நெஞ்சே! - அறியாமைப் பெரிதும் உடைய மனமே! (உனக்கு) இருமை இன்பமும் - இம்மையிலும் மறுமையிலும் (இவ்வுலகிடத்தும் சுவர்க்கத்திடத்தும்) சுகபோகங்களும், இறுதியில் முத்தியும் - அம்மையில் அந்தமில்லாத (முடிவற்ற) அழிவில் வீடும். எளிதினில் - மிகவும் எளிமையாக வந்து எய்தும் - வந்து அடையும் (வந்துசேரும்). எருமை ஊர்தியும் - கரிய எருமைக்கிடாயினை வாகனமாக்கொள்ளும் தென்றிசைக் கடவுளாகிய தருமராசனும். அஞ்சுவன் - நீ சிவகணத்தவன் எனக்கருதி நின்மாட்டு வந்தடையமாட்டான். மற்று - அதுவேயுமன்றி, இனி - இனிமேல், ஒருகுறை உண்டோ - நிறைவேயன்றி சிறிதாயினும் குறைவுளதோ, கூறுவாய் எ - து.

(கு - ரை) இப்பாட்டு நெஞ்சொடு கூறலாம். பெருமானைப் பெரிதுந் தொழப்பெற்றதால் பெருமைசேர் அயன் எனப்பட்டது. பேர் அருள் - அவர் அவர்தம் பதவி கெடாமல் இருக்குமாறு கருணைபுரிவது. அன்னேன் - சுட்டுப்பொருளது. இருமை - இரண்டு தன்மை (இம்மை மறுமை) "அம்மையெனக்கு அருளியவாறு" என்னுந் திருவாசகம் பற்றி அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டினை இறுதி இல் முத்தி எனக் கூறப்பட்டது. திருவையாற்றில் இருந்தவர்க்கும் இறந்தவர்க்கும் இயமவாதனையின்றென்பது திருவையாற்றுப் புராணச் சிறப்பாம். சுசரிதன் சரிதமும் ஆட்கொண்டார் அருட்பேறும் உறுதிப்படுத்தும் நிறைகுணனுகிய பரிபூரணப் பொருளைப்பற்றுதலைச் செய்வோர் நிறைவெய்தப் பெறுவோர் என்பது ஒருதலை.ஒகாரம் - வினப்பொருளிலும் இல்லெனும் பொருளிலும் வந்தது. (தொடரும்)

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

### ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி.

கோவில் மிக அழகாகவும் சுத்தமாகவும் இருக்கிறது. சிப்பந்திகளும் சிவாச்சாரியார்களும் தங்கள் கடமையைச் சிறப்புற செய்கிறுர்கள். அவர்கள் தொண்டு பெருமைக்குரியது.

(Sd.) N. Sethuraman,
Director, Raman & Raman Ltd.,
Kumbakonam,

11—6—72

# வாழ்த்தும் அஞ்சலியும்

திரு. நா. கிரிதாரிபிரசாத்,
52, D. H. S. Road,
Coimbatore-2

Camp சென்னை,
18—11—71

மஹா சந்நிதானம் அவர்களுடைய பொற்பாதங்களுக்கு வணக்கம் செலுத்தி அடியேன் கிரிதாரிப்பிரசாத் எழுதும் கடிதம். எங்கள் மதிப்பிற்குரிய பரமாச்சாரிய சுவாமிகள் வாரணாசியில் முக்தி பெற்றபின் தாங்கள் அருட்செங்கோல் தாங்கி இருப்பது பற்றி ஒரு புறம் மகிழ்ச்சியும் ஒரு புறம் வருத்தமும் ஏற்படுகிறது. சுவாமியவர்கள் மறைவதற்குச் சில மாதங்களுக்கு முன் அடியேன் பல மணி நேரம் அவர்களுடன் உரையாடி மகிழ்ந்தேன். அவர்கள் மறைவால் சைவ உலகமும் தமிழ் உலகமும் பெரிதும் நலிவுற்றிருக்கின்றன.

தங்களை இப்பெரும்பதவியில் காண அடியேன் இறைவனைப் பலகாலும் இறைஞ்சியதுண்டு. தாங்கள் செங்கோலோச்ச அமர்ந்தது எங்கள் பாக்கியம். K. R இராதாகிருஷ்ணன் அவர்களும் தங்களுக்குத் தன் தாழ்மையான வணக்கத்தைச் செலுத்துகிறார்கள். அடியேன் அப்பக்கம் வரும்போது சுவாமியவர்களைச் சந்திக்கிறேன்.

திரு. கீ. இராமலிங்கம்,

"தமிழ்மணம்"
சென்னை - 30.

## அன்பின் திருவுருவம்

அனுகலாகாத கயிலைமலையை வலம்வந்து சேவித்துத் திரும்பி தருமையாதீனத்தின் வரலாற்றிலேயே காணாத புதுமையைப்புரிந்த மகாசந்நிதானம் அவர்கள், இறைவன்பால் பூண்டிருந்த - சற்றும் தளராத பேரன்பு, வரலாற்றுச் சிறப்புடையதாகும். ஒரே ஒரு நிகழ்ச்சி மட்டுமே இங்குக் குறிப்பிடுகிறேன். 1955-ல் வந்த சிவராத்திரியன்று, திருமடத்தின் பூசைக் கூடத்திலும், திருக்கோயிலிலும், காலபூசைகள் இரவு 10-30 மணிவரை நிகழவேண்டிய காலபூசைகள் முடிந்ததும் அடியேன் அலுத்து விடு திரும்பினேன். இல்லத்துக்குள் அடிவைத்ததுமே 'சந்நிதானத்தில் அழைக்கிறது' என்று கூறிக்கொண்டு ஆள் வந்தான். ஓடினேன்; சந்நிதானம் அவர்கள் உந்தூர்தியில்

அமர்ந்திருந்தார்கள். அடியேனுக்காக ஊர்தி காத்து நின்றது! ஏறப்பணித்தார்கள்; ஏறிக்கொண்டேன். மாயூர நாதர் திருக் கோவில் வழிபாட்டுக்கு எழுந்தருளினர்கள்.

அங்கும், குமரக்கட்டளைசந்நிதியில் முறையாக வழிபாடு கள் நடந்தன. மணி 11-30க்குமேல் ஆயிற்று; தருமை திரும்பு வார்கள் என்று எண்ணினேன். வள்ளலார் கோயிலுக்குச் சென்றுர்கள்; அங்கேயும் முறையாக வழிபாடு செய்து, அப்படியே திருநின்றியூருக்கு விடச்சொன்னுர்கள் ஊர்தியை.

திருநின்றியூர் கோவிலில் அப்போது மின்விளக்கு இல்லை. மணி 12-30க்குமேல் இருக்கும். அக்காலத்துக்குரிய பூசைக்கு ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. ஆதீனக் கோவில் களில் பூசைகள் காலாகாலத்தில் சரியாக நடைபெறுகின்றனவா என்று ஆதீனகர்த்தர் அவர்களே திடீரெனப் பார்வையிடுவது போலவும் இருந்தது.

அங்கிருந்து வைத்தீசுவரன் கோவிலுக்குச் சென்றுர்கள். எல்லாச் சந்நிதிகளிலும் முறைப்படி வழிபாடு முடிய இரவு 2-30 மணிக்குமேல் ஆகிவிட்டது. தருமைக்குத் திரும்பிவிட மாட்டார் களா என்று அவாவினேன். அவா நிறைவேறவில்லை.

சீகாழிக்குச் சென்றுர்கள்; அங்கும் வழிபாடு முறையாக நடந்தது. மணி 3-30க்குமேல் இருக்கும்; அடியேனல் நின்றும் நடந்தும் நிலைகொள்ள முடியவில்லை.

திருக்கடவூருக்கு ஊர்தியைச் செலுத்தப் பணித்தார்கள். அங்கேயும் முறைபிறழாத வழிபாடு நடைபெற்றது. தருமைக்குத் திரும்பியபோது மணி ஐந்தை எட்டிவிட்டது. அடியேன் விழுந் தடித்து ஓடிப் படுக்கையில் சாய்ந்துவிட்டேன்.

விடிந்த பிறகு, காலைக்கடன்களை முடித்துத் திருமடத்துக்குச் சென்றேன். என்ன வியப்பு! குருமகாசந்நிதானம் அவர்கள், ஊர்தியிலிருந்து நடந்ததுமே திருமஞ்சனத்திற்குச் சென்று மேற்கொண்டு நடைபெற வேண்டியிருந்த காலபூசைகளை முறை தவருமல் முடித்து, கயிலையெம்பெருமான்போல களிமிகு காட்சியளித்துக்கொண்டிருந்தார்கள். ஆண்டவனின் அன்புப் பணியிலே அவர்களுக்கு இருந்த சலிக்காத, இளைக்காத ஈடு பாட்டின் மாபெருமையை என்னவென்று போற்றுவது ! பாராயணங்களிலும் செபத்திலும், அவர்கள் கொண்டிருந்த ஆர்வமும் தளராத - காலமும் தவருத ஈடுபாடும், அவர்களது அடர்ந்த அன்பின் திறத்தை உலகறியச் செய்வனவாகும்.

அன்பே உருவமான அவர்கள் திருமேனி இனி என்று சேவிக்க வாய்க்கப்போகின்றது! அவர்களின் அன்புப் பண்பின் பெருமைசால் திருவுருவந்தான் என்றும் நிலவி அனைவருக்கும் வழிகாட்டும் வளமையுடையதாகும்.

வித்துவான். திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை, நுங்கம்பாக்கம்
12—11—71

நேற்றிரவு வானொலியின் வாயிலாக ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானமவர்கள் பரிபூரணம் அடைந்த செய்தியைக் கேட்டு அளவிலாத்துயருற்றேன். எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தங்களுக்கும், ஏனைய திருக்கூட்டத்து அடியார்களுக்கும், ஆதீனத்தைச் சார்ந்த அனைவருக்கும் பணிவுடன்தெரிவித்துக்கொள்ளுகிறேன். எல்லாம் ஈசன் செயல்.

பேராசிரியர், சென்னை
திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், 12—11—71,

நம் ஆதீனத் தலைவர், ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், காசியில், பரிபூரணம் அடைந்த செய்தியினை, இன்று பத்திரிகையில் பார்த்து வருத்தம் அடைந்தேன். நம்மால் என்செய்ய இயலும்! "மூலம்வந்து உதவிய மூவர்க் காயினும், காலம்என்று ஒருவலை கடக்க லாகுமோ" என்ற ஆன்றோர் வாக்கினை, நாம் நினைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்க, ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் ஆற்றிய அரும் பெரும் பணிகள், என்றும் போற்றப்பெறும். அவர்களின் நல்லுயிர், இறைவன் திருவடி நிழலில், இன்புற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்களின் பணிகளை வளர்த்து, அவர்களின் அருளுரைகளைப் பின்பற்றி ஒழுகுதல், நம்மனோர் கடமையாகும்.

புலவர். திரு. கீரன் முகாம்:- புதுடில்லி.
15—11—71.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் எதிர்பாராத நேரத்தில் பரிபூர்ணம் பெற்று சிவாக்கியம் எய்தியது அறிந்து அதிர்ச்சியுற்றேன்.

நானும், வாகீசகலாநிதி அவர்களும் தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவில் கலந்துகொள்ள தில்லிவந்துள்ளோம். 12—11—71 அன்று தில்லி திரு. M. S. P. சண்முகனுர் அவர்கள் வழி செய்தியறிந்து திடுக்கிட்டோம்.

எல்லாம்வல்ல திருவருளோடு குருவருள் இரண்டறக் கலந்துவிட்ட புனிதமே நிகழ்ந்துள்ளது எனினும், பாசமயக்கத் திற்கும் உலகியலுக்கும் அடிமைப்பட்ட என்போன்ருேரால், இவ் வதிர்ச்சியைத் தாங்க இயலவில்லை.

அவ்விடம், செங்கோல் கைக்கொண்ட செய்தியும் அறிந்து ஒருவாறு தேறியுள்ளோம்.

நேற்று புதுதில்லி, கரோல்பாக் பகுதியில் உள்ள மதராஸி பப்ளிக் கூட்டத்தில் திரு. M. S. P. சண்முகம் அவர்கள் கயிலைக் குருமணி அவர்கட்கு ஒரு நினைவு அஞ்சலிக் கூட்டம் ஏற்பாடு செய்தார்கள். 14—11—71 கயிலைக் குருமணி அவர்களின் பிறந்த நாள் அல்லவா? அவதரித்தநாளின் அருமையைப் பேசவேண்டிய நேரத்தில், அடக்கமானதின் உருக்கத்தைப் பேசவேண்டி வந்ததே என உள்ளம் பட்ட வேதனை சொல்லுந்தரமாயில்லை.

திரு. கி. வா. ஜ. அவர்கள் தலைமை தாங்கிப் பேசினர். எளியேன் உரை நிகழ்த்தினேன். திரு. M. S. P. சண்முகம் அவர்கள் வரவேற்ருர், கரோல்பாக்கில் உள்ள தமிழர்கள் பெருமளவில் பங்குகொண்டனர்.

திரு. D. கணேச ஓதுவார் — திருக்கடம்பந்துறை
திருமுறைப்பணி — 29—11—71

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கயிலாயம் அடைந்ததைக் கேள்வியுற்று மிகவும் வருந்துகிறேன்.

அதேசமயம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 26 வது பட்டமேற்று ஞானபீடம் அமர்ந்து அருளாட்சி செய்வதைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியடைகிறேன். முன்காலத்தில் திரு முதுகுன்றம் திருமுறைப் பாடசாலையில் அடியேனுடன்தோழமை கொண்டிருந்த பெருமையை நினைந்து நினைந்து மகிழ்கிறேன்,

வித்துவான், திரு. A. S. கோவிந்தராசன்
தமிழாசிரியர்,
பச்சையப்பன் கல்லூரிப்பள்ளி.

சென்னை-1
24—12—1971.

ஒருநாள் வானொலி வழியே, கயிலைக்குருமணி அவர்கள் காசியம்பதியில் பரிபூரண நிலையடைந்த செய்திகேட்டு அதிர்ச்சி யுற்றேன்.

பல்லாண்டுகட்குமுன், பனசையிலிருந்து வேலூர் முருகனின் விழாவணிகாண கிருத்திகை நாளில் வந்த அப்பொழுது, நம் குருமணியவர்கள் திருவாசகமீந்து சிறப்பித்தார்கள். அப்பெரு நூலின் அடைக்கலப்பத்தையும், நீத்தல் விண்ணப்பத்தையும் நீள நினைந்தோதினேன்.

பின்னர் ஞானசம்பந்த நன்மலர்பெற்று நடைமுறை நிகழ்ச்சி கள் யாவும் உணர்ந்து அன்றைய நிகழ்ச்சிகள் அனைத்திலும் அடியனும் ஒருத்தனாய் அருகிருந்ததுபோல் கற்பனை கொண் டேன். விடுமுறையில்லா வேதனைகொண்டு ஒருமுறை வருதற்கு ஒல்லாதிருந்தேன். எனினும் ஒன்றனுள் ஒன்றாய் ஒளிவிட்டிலங் கும் என்ற சைவ நூற்றுணிபால் தண்ணளிகொண்டேன்.

ஞானபீடத்தின் நல்லொளி விளக்காய் அம்பல தேசிகர் அருட்டிறமதனால் சரபோஜி மன்னரின் தன்முனைப்படக்கிய தத்துவபீடம் தழைத்து நனிசிறந்த தருமையின் பெருமை தரணி யில் மேம்படத் தங்களின் அருளாட்சி பெரிதும் துணைசெய்யும் என்ற துணிவுடன் பெருமகிழ்வெய்துகின்றேன்.

திரு. ஐ. சிவலிங்கம் பிள்ளை

காரைநகர் - இலங்கை
9—12—71.

25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 10—11—71 இல் பரிபூரணம் எய்தியதை ஞானசம்பந்தம் வாயிலாக அறிந்தேன். அவர்கள் சைவத்திற்கும் தமிழிற்கும் செய்த தொண்டுகள் அளப்பில.

தாங்களும் சைவம் பெருக்கும் பணி புரியத் தங்களுக்குப் பூரண ஆயுளும் தேகாரோக்கியமுமளிக்கும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வித்துவான். திரு. வி. சிவக்கொழுந்து, கள்ளிப்பட்டி
தமிழாசிரியர். 13—11—'71.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பரிபூரணம் எய்திய செய்தி அறிந்து மிக்க வருத்தமெய்தினேன். அத்தவமணி அவர்களின் திருமுறை யீடுபாட்டினையும் சிறப்பாகப் பெரிய புராணத்தில் தோய்ந்த பற்றினையும் அத்திருமுறைகளினின்று அடிக்கடி மேற்கோளுரைக்கும் பெற்றியினையும் நேரில் அடியேன் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்திருக்கின்றேன். அவர்கள் அடியேற்கு நேரில் வழங்கிய அருட்கொடையான திருவாசகம் என்பால் உளது. அருள் முனிவர் பரிபூரணச் செய்தியை அறிந்த அடியேன் சிந்தை தருமைத் தவப்பீடத்தை அலங்கரிக்கும் அடுத்த அருளாளரைக் காட்டியது; வேலூர் சமயப் பிரசார நிலயத்தில் பத்து நாட்களுக்குமுன் தரிசித்து "தமிழ் அருச்சனை", "குருஞானசம்பந்தர் அட்டகம்" இரண்டையும் அருட்கொடையாகப் பெற்ற இடம் சென்றது.

தொண்டினால் அப்பர் பெருமானையும், உளநெகிழ்ச்சியால் மணிவாசகரையும் அன்பினால் சுந்தரரையும் அருள்திறத்தால் சம்பந்தப் பெருமானையும் நினைவூட்டும் அருட்குரவராகிய தாங்கள் தருமைக் குருபீடமாகிய அருளாசனத்தமரும் திருவருளை நாடினேன். இன்று அந்நினைவே செய்தியாகப் பத்திரிகையில் வெளிவரப் பார்த்து மகிழ்ந்தேன். திருவருளுக்கு வணக்கம்.

பிரதிஷ்டாபூஷணம்
சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் நயினாதீவு.
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், 21—11—1971.

எங்கள் கைலைக்குருமணியவர்களின் பரிபூரண விஷயம் தங்கள் பத்திரிகை வாயிலாக அறிந்து மிகமிக வருந்தினேன். இறைவன் திருவருள்படி நடக்கின்றது.

தேவரீர் அவர்களின் பட்டணப் பிரவேச அருள் ஆட்சி விழா இனிது நிறைவேறி உலகெங்கும் சிரம் தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்கவும், சிவாலய புனருத்தாரணங்கள் மேன்மேலும் விருத்தியடையவும், பூமண்டலம் முழுமையும் சுற்றி சைவஸ்தாபனம் செய்ய அருட்சக்தி மேன்மேலும் பெருக ஸ்ரீ நாகபூஷணியம்பாளைப் பிரார்த்தித்து அர்ச்சித்து பிரசாதம் வருகிறது.

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 31, இதழ் 6, பக்கம் 354 இன் தொடர்ச்சி )

## 52. தருமிக்குப் பொற்கிழி அளித்தது. (1)

சொற்சுவை தேரும் பாவலர் இருக்கப் பலகைதந்த பரமன் தருமியென்ற ஏழை அந்தணனுக்குப் பொற்குவை தந்த பரிசு பகர்வாம்.

தென்னவன் வங்கிய சூடாமணிமாறன் மன்னவர் மன்னனாகத் திகிரியுருட்டும் நாளில், அன்னம் கண்டறியாத ஆண்டவனின் முடியில் சூட்ட பல மலர்களையும் நந்தவனத்தில் பயிர் செய்தான். மாதவியோடு பாதிரியும் தழைத்துப் பூத்தன. கூவிளம், மந்தாரம், மல்லிகை, முல்லை, இலஞ்சி, கோங்கம் இவை எழிலைப் பரப்பின. கொன்றை, கரந்தை, செழுங்கரவீரம், நந்தி, செருந்தி, குருந்தம், புன்னாகம் திசையெங்கும் மணம் பரப்பின. இவற்றிற்கெல்லாம் மேலாகச் சண்பக மலர்களைத் தனிக் கவனத்துடன் பயிர் செய்து அதனால் இண்டை தொங்கல், தொடையல், தாமம், கண்ணி என்ற பலவேறு மாலைகளைப்புனைந்து, வணங்கார்ஊர்கருக்கிய கண்ணுதலார் திருமேனியைக் கவின் செய்தான். பின் மாமதுரேசர் அடித்தாழ்ந்து சண்பக மாலை புனைந்த புதுக்கோலந் தன்னை வியந்து 'இவர் சண்பக சுந்தரரோ - என்றதிசயித்தான். அதுமுதல் கூடல் நாயகன் சண்பகசுந்தரன் ஆனான். இப்பணி செய்த பாண்டியனைச் சண்பகமாறனென்று மக்கள் அழைத்தனர். இப்படி ஒன்றிய மனத்துடன் பாண்டியன் பணிசெய்யும் நாளில் இளவேனில் காலமும் வந்தது.

வந்தது இளவேனில் :

மிகக் கொடுமையான கோடை வெப்பத்தைப் பொறுக்க முடியாமல் ஓடையும் தடங்களுமே கொதித்தனவென்றால் மனிதர்களைப் பற்றிக் கூறவாவேண்டும்?

செக்கச்சிவந்த சூரியனைப்போல் மேனிகொண்ட சிவபெருமானைப் போல முள் முருங்கை மரம் சிவந்த பூக்களைப் பூத்தன. இந்திரனைப் போல் காஞ்சிப் பூக்கள் அலர்ந்தன. சந்திரனின் மேனிபோன்று வெண்கடம்ப மலர்கள் தோன்றின. திருமாலின் கரியநிறங்காட்டும் காயாம்பூக்களும் காட்டை அழகு செய்தன.

ஊடிய மகளிர் போல இலைகளை உதிர்த்தனமரங்கள், பின்னே உயிரன்னவர்களைக் கூடினாற்போல் தழைத்து, கணவனைப்பிரிந்த மகளிர்போல கண்ணீர் (கள் - நீர்) அரும்பி மெய்பசந்து; மையல் நீடினார்போல் அலர்பூத்து நெருங்கின. காதலர்மெலிவுற மெலிந்து நெஞ்சம் குழைவுறக் குழைந்து நிற்கும் கோதிலாக் கற்பினார்போல வாடிய மரங்களைத் தழுவி யிருந்த கொடிகள் கோடையில் வாடின. வசந்தம் வர மரங்கள் இப்போது தழைத்தன. அவைகளைத் தழுவிய கொடிகளும் தழைத்து நின்றன.

தென்திசைக் காற்றில் மலர்க்கொம்புகள் தேன்சிதற ஆடின. வண்டுகள் அதனருகே இனிய பண்ணெழுப்பின. இது நாட்டியப்புலவன் ஆட்டும்போது நகைமுகம் வியர்வை சிந்தப் பாட்டிசைத்து ஆடுகின்ற பாவைமார்போலிருந்தது.

நற்குலத்துச் சான்றோர்கள் தம்பால் யாசித்து வந்தோரின் துயரைத் தம்முயிரைக் கொடுத்தாயினும் துடைப்பர். அதுபோல கீழே உதிர்ந்து வாடிய மகிழமலர்கள் தம்மை நாடிவந்த வண்டுகள் உண்ணத் தேன்தந்து கிடந்தன என்கிறார் ஆசிரியர்.

இளவேனில் தொடங்கவும் குயில்கள் கூவத் தொடங்கின. செங்கோல் வேந்தன் வெளிப்பட்டபோது தேயங்காவல் மாறிய வேந்தன் போல மயில்கள் ஒடுங்கின.

தென்றல் அங்கங்கே திரிந்து அறிவு தேடும் அறிஞன்போல் வாவிகளில் புகுந்து - பொங்கரில் நுழைந்து; மயிலை, முல்லை, மல்லிகைப் பந்தரில் தாவி மணங்கொண்டு குளிர்ந்து வீசியது,

வேனில்கோமகன் மகுடஞ்சூடி வீற்றிருக்கும் காட்சி செவ்விதாக இருக்கிறது.

தாமரை களாஞ்சி தாங்கத் தண்குயில் முழவமேங்க
மாமரு தமருங் கிள்ளை மங்கல மியம்பத் தும்பி
காமர மிசைப்ப முள்வாய்க் கைதை வாளெடுப்ப வேனில்
கோமகன் மகுடஞ் சூடி யிருப்பதக் குளிர்பூஞ் சோலை

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

அந்த அற்புதமான சோலைக்கு மைந்தரும் மகளிரும் நீராடவும், பொழுதுபோக்கவும் வந்தார்கள். மலர்களைப் பறித்தும் சூடியும் துணைவர்களுடன் இன்பமாய்ப்பொழுது போக்கினார்கள்.

## சில சோலைக் காட்சிகள் -

சில பெண்களின் பாதங்களை அவர்கள் வளர்த்த கொம்புகள் பூச்சொரிந்து வணங்கின. கொம்பரே வணங்கின என்றால் இம்பர் வீடளிக்கும் தெய்வம் - மகளிரே என்று உலகோர் வணங்குவதில் வியப்பென்ன இருக்கிறது.

எட்டாத மலர்க்கொம்பொன்றை வளைக்கலாற்றாது துணைவி வருந்த அதுகண்ட காதலன் 'இதுவுமென்ன! ஊடிய மகளிர் போல வளைய மறுக்கின்றதே' - என்றான். அவன் துணைவி அவனது நடையில் ஐயங்கொண்டு கண் முத்தங் கொழிப்ப நின்றாள். இப்படியெல்லாம் விளையாடியும் மலர் கொய்தும் சோர்ந்த மெல்லியலார் குமுதமும் நீலமும் நளினமும் பூத்த தடாகத்துள் நீராட இறங்கினர்.

## நீராடும் நேரிழையர் :

கமலமும் குமுதமும் பூத்த தடாகங்கள் இப்போது முல்லையும் சண்பகமும் கோங்கமும் பூத்ததோ என்று வியக்கும்படி விளங்கியது. நீராடும் மங்கையர் கூந்தல் பாசிபோல தடாகத்தின் மேல்புறம் பரந்தது. நெடுநேரமாக நீராடிவிட்டுக் கரையேறுகிற தன் மனைவியிடமே ஒருவன் என்னுயிரன்னவள் எங்குள்ளாள் என்று கேட்க அவள் தன் இதழ் வெளுத்தும் கண் சிவந்துமிருக்கிற காரணத்தால்தான் இப்படிக் கேட்கிறான் என்பதைப் புரிந்துகொள்ளாமல் மார்பைக் கண்ணீரால் நனைத்து நின்றாள்.

இன்னொரு காதலன் தன் காதலியின் முகம் கமலங்களுக்கு இடையில் கமலமாக மலர்ந்திருக்க அவளைக் காணாதவனாகி வருந்திச் செல்கிறான். ஆவளோ கமலத்திடை முல்லையரும்பியதைப்போல நகைத்து அவனையழைத்துக் கூடி மகிழ்ந்தாள். தம் மெய்யில் பூசிய கத்தூரியையும் சந்தனத்தையும் தலையில் சூடிய மலர்களையும் பொய்கைக்குக் கொடுத்து தாமரையின் இனிய வாசனையைச் சுமந்து நெஞ்சுக்கினிய மைந்தர்களோடு மகளிர் கரையேறினர்.

நீரால் நனைந்த ஆடையுடன் கரையேற வெட்கிய பெண்கள் தம் காதலர்களை ஆடைவேண்டி நின்றபோது மாயவனிடம் ஆடைகேட்டு நின்ற ஆய்ச்சிறுமியர்களை ஒத்தனர். மனமும் உடலும் குளிர நீராடியபின் மெல்லியலார் மதுவருந்த சோலையினுள் வந்தனர்.

மதுவும், மங்கையரும் :

பொன்னாலும், வெள்ளியாலும், பளிங்காலும் செய்த பாத்திரத்துள் கூர்வாளை நட்டாற்போல் தேறலைச் சேடியர் வார்க்க சிறுவிரலால் அதனைத் தெள்ளித் தெளித்துப் பின்பு தொடரும் வண்டுகளை விரட்டி விட்டுக் காரிகையார் தேறலை அருந்தத் தொடங்கினர். மதுவுண்ட மயக்கத்தால் அவர்கள் செய்த செயல் நமக்கு வியப்பையும் நகைப்பையும் ஒருங்கே தரும்.

வள்ளத்தில் மதுவை வார்க்கும் சேடியிடம் தலைவி ' என்னடி வாளினால் வள்ளத்தைச் சிதைக்கிறாய் ' - என்று கோபித்துக் கூறினாள்.

இல்லையென்று பலரிடமும் யாசித்துவரும் வறியோர், வைத்தநிதி கண்டால் அகல்வரோ? அதுபோல மலர்தோறும் தேனை நக்கித்திரிந்த வண்டுகள் இப்போது குடத்தோடு கள்ளைக் கண்டதனால் அதனையே சுற்றி வட்டமிட்டு மொய்த்து நின்றன.

இன்னொருத்தி தானுண்டெஞ்சிய மதுக்கோப்பையில் தோன்றிய திங்களைப் பார்த்து ' என்னைப் பிரிவுக் காலத்தில் தீயாகச் சுட்டாய் அல்லவா ! நல்லவேளை இதனுள் அகப்பட்டாய் உன்னை விடுவிக்க இனிமாட்டேனென்று இன்னொரு வள்ளங் கொண்டு மூடி நிலவைச் சிறை செய்தாள். கள்ளுண்டாருக்கு வாய் வெளுத்துக் கண்சிவத்தல் இயல்பு, தன்னுருவைக் கண்ணாடியில் பார்த்த ஒருபெண் ஐயகோ என் நலனை உண்டு சென்றவன் எவனோ என்று புலம்பினாள்.

கள்ளுண்டு மகிழ்ந்தபின் அம்மைந்தர்களும் மங்கையர்களும் இளம்புளிந்தயிர் விராய இன்சுவை பொதிந்த சோற்றை உண்டார்கள். அதன்பின்பு இனிய இசையை வீணையில் எழுப்பி பூவையர் பாட காளையர் வெண்ணெய்ப் பாவைபோல் உருகிச் சோர்ந்தார்கள். இளவேனிலின் இன்பத்தை மக்கள் இவ்வாறாய் அனுபவித்துக்கொண்டிருக்கும் நாளில் ஒருநாள் செண்பக மாறன் தன் இன்னுயிர்த் துணைவியோடும் சோலைக்கு வந்து வினைவல்லான் செய்த கதிர்விடு காந்தக் குன்றின் மீது வெப்ப இளைப்பாறுவதற்காக வீற்றிருந்தான். (வளரும்)

# குருபூசை

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்.
திரு. ச. தண்டபாணி தேசிகர்

[ முன் சுருக்கம் :- மேலான தருமம் அன்பும் ஆதரவும். அவ்விரண்டும் செய்யத்தக்க இடம் சிவபெருமானே என்பதும் அவ்வன்பை உயிர்கட்கு ஊட்டுவன வேத சிவாகம தோத்திர சாத்திரங்களாகிய பதிநூல்களே; அவற்றை உபதேசிக்கும் ஆசிரியனும், பெறும் சீடனும் இன்னின்ன ஆசார நியமங்கள் உடையராதல் வேண்டும் என்பதும், சிவஞானமாகிய முற்கூறிய நூல்களை எழுதுதல், எழுதச் சாதனங்களையீதல் முதலியன உதவினோர் எய்தும் பயன்கள் இவை என்பதும் கூறப்பெற்றன. ]

## திருமடம் அமைக்கும் இடமும் - முறையும் :

திருமடங்கள் ஞான ஆலயங்கள். அவை சிவ ஆச்சிரமங்கள் எனவும் வழங்கப்பெறும். மக்கள் மகிழ்ச்சியோடு வாழும் ஊருக்கு அண்மையில், ஆறு, நீரோடை முதலியனவும், சோலைகளும் நிறைந்த சூழலாகத் திருமடத்திற்கு எல்லை குறித்தல் வேண்டும்.

திருமடம் அமைக்கும் இடத்தைச் சூழ ஐந்துமுழ உயரத்தில் ஒரு திருமதில் எடுப்பித்தல் வேண்டும். அம்மதிலைச் சூழப் புறத்திலே நாலாபக்கமும் பூசைக்குப் பயன்பெறும் திருநந்தன வனங்களை அமைத்தல்வேண்டும்; அதனைச்சூழ நான்கு திசைகளிலும் நீர்வற்றாத பொய்கைகளை அமைத்தல் அவசியம்; அதனைச்சூழ அடையவளைந்தான்மதிலை ஆக்கி, நாற்புறமும் மலை போன்ற கோபுரங்களையும் அமைத்தல்வேண்டும்.

இத்தகையசூழலின் நடுவிலே உள்ள முற்கூறிய நடுநிலத்தை மூன்று பகுதியாகப் பிரித்து திருமடத்தைச் சிவாகமக் கல்வி பயிலக் கூடிய ஞான நிலயமாகவே என்றும் விளங்கும்படி எடுப்பித்தல் வேண்டும். ஒரு பகுதியில் ஞானானுபவங்கூட்டும் நிலயமும், ஒரு பகுதியில் மண்டபங்களுமாகச் செய்தல் வேண்டும்.

இம்மூன்று பகுதிகட்கும் இடையிலே ஐந்து சுற்றுலைகளையுடைய திருக்கோயிலை அமைத்து, அதனடுவே தென்முகக் கடவுளாகி, வடவால மரத்தடியில் இருந்து, அநுபவ ஞானத்தைச் சனகருதியர்க்கு உபதேசித்த ஞான தட்சிணாமூர்த்தியை மட்டும் தாபித்தல் வேண்டும். வேறுவேறான மூர்த்திபேதங்களையமைப்பின் ஞானம் பெற விரும்பும் பக்குவச் சீடன் மனமுங்கூட அவற்றில் ஈடுபட்டு, தாம் காணும் மூர்த்தி பேதங்கட்கு ஏற்ற குண நலமுடையதாக மனம் ஆசாபாசங்களிலும், உலக ஞானத்திலும் ஈடுபடவும் செய்யலாம். ஆதலால் சாந்த மூர்த்தியாகிய ஞான தட்சிணாமூர்த்தியையே அமைத்தல் வேண்டும்.

இங்ஙனம் அமைத்த திருமடமாகிய சிவாச்சிரமத்தின் அக்கினி திசையிலே திருமடைப்பள்ளியையும், தெற்கிலே திருமடத்திற்கு வேண்டிய பல்லக்கு, கட்டில், பாதுகை முதலான பண்டங்கள் வைக்கும் இடத்தையும், நிருதி திக்கிலே சமித்து, தருப்பை, விறகு, கத்தி கோடரி, மண்வெட்டி முதலான ஆயுதச் சாலையும், மேற்கே திருமஞ்சனசாலையும், திருமஞ்சனத்திற்குரிய பொருள்கள் வைக்குமிடமும், வாயுமூலையிலே கணக்கற்ற நெல்லைச் சேமித்துவைக்கும் நெற்களஞ்சியங்களும், வடக்கே திருவாபரணம், நவரத்னங்கள், பொன் முதலியன சேமித்து வைக்கும் பொற் பண்டாரமும், ஈசானதிக்கிலே சிவபூசை அக்னிகாரியம் செய்யும் யாகசாலை பூசை மண்டபங்களும், கிழக்கே சத்திரசாலை அதாவது பாதுகாப்புக்கான ஆயுதங்கள் வைக்கும் இடமும் அமைத்தல் வேண்டும்.

திருக்கோயிலிலே பிரதான மூர்த்தியாக அமையவேண்டிய திருவுருவம் தட்சிணாமூர்த்தியே. அதனைச் சிலை, உறுதியான தாருவகைகள், செம்பு முதலான ஐம்பொன் கலந்த உலோகம் இவற்றால் அழகுறச் சமைத்தல் வேண்டும்.

அதற்குரிய சிவாகம விதிப்படி அதிவாதகன்ம முதலான பிரதிட்டைக்குரிய கிரியைகள் அனைத்தையும் செய்து தாபித்து எப்போதும் பூசை இடையறாது நடந்து வருதற்குரிய நிலம் பொலங்களை வழங்கி, தம்மிடத்துண்டாகிய ஆணவாதி மலங்கள் அறும்வண்ணம் தோன்றாத் துணையாய் அவரவர் உள்ளத்திருக்கும் தோன்றாத் துணையை எப்போதும் தியானம் செய்தும் தோத்திரஞ்செய்தும் வருதல் வேண்டும்.

பிரதிட்டை செய்த பயன் தனக்கு எய்தும்வண்ணம் பிரதிட்டை செய்த ஆசாரியனுக்கு பொன், ஆடை இவைகளையளித்து அவர்கள் எப்போதும் சிவத்தியான பரர்களாகவே

இருந்துவரவும், மண் பெண் பொன் இவைகளில் சிறிதேனும் சிந்தை செலுத்தாமல் சிவனையே சிந்தனை செய்பவர்களாகவும் பாதுகாத்து வருதல் வேண்டும்.

தங்கள் தங்கள் ஒழுக்கநெறியிலிருந்து சிறிதும் நழுவாத பிராமணர்கள், சிவனடியார்கள், மாகேசுரர்கள், முடவர், பொட்டையர், உறுப்புக்குறையுடையோர்|குழந்தைகள், நோயாளிகள், கிழவர்கள் இவர்களையும் அன்னபானாதிகளால் குறைவின்றி வைத்துப் பாதுகாப்பதே திருமடத்தின் குறிக்கோளாகும்.

இத்தகைய சிவபுரமாகிய திருமடத்தைச் செய்தபேர்கள் இன்பவுலகமாகிய சிவலோகத்தைச் சேர்ந்து என்றும் இன்பம் பெருக இருப்பார்கள்.

இச்சிவபுரத்தைக் கட்டின தச்சனும், சிவபுரம் கட்டப் பயன் பட்டகல், மண், மரம்முதலானபொருள்களும்அதற்காகஉழைத்த எருது கடா முதலியவைகளும், பூலோகத்திற்கு மேலான புவர் லோகத்திற் சென்று போகம் பொசித்திருப்பர்.

இத்தகைய திருமடம் இருக்கும் சூழலில் பிறந்த குழந்தைகள் சிவஞானிகளாகவே விளங்குவர். திருமடத்திலிருக்கும் சிவஞானியர்க்கு அன்னமிட்டபேர்களும், அங்கு உயிர்துறந்தவர்களும், உயிர்விடவேண்டும் எனக் கருதியவர்களுங்கூடச் சிவலோகபதவியடைவார்கள்.

திருமடங்களில் நித்யவாசம் பண்ணிக்கொண்டு, சிவதல யாத்திரை செய்வோரும், அவர்கட்குத் துணையாகச் செல்வோரும், அவர்கட்கு வழிநடையில் உதவிசெய்தவர்களும், எல்லார்க்கு மேலாகச் செல்வமும் புகழும் பெற்று இம்மையில் வாழ்வார்கள். மறுமையில் சிவஞானிகளாகிச் சிவலோக பதவியடைவர்.

சிவதலங்களிற் சென்று விதிப்படி வழுவாமல் சிவபூசை செய்வோரும், சிவாசாரியர்களும், சிவனடியார்களும் நோய் நொடியின்றி வாழ உபசரிக்கும் அனைவரும் எல்லா நலமும் பெற்று இன்புறுவர். சிவனுடைய சீர்பாதங்களை யடைந்து இன்புறுவர், என அறுமுகக்கடவுள் அருளிச்செய்ய முனிவர்கள் சிவாச்சிரமம், சிவஞான முறைகளையும் பயனையுங் கேட்டு இன்புற்றனர்.

அப்போது முருகப்பெருமான் அடுத்து ஐவகை வேள்விகளைப் பற்றிக் கூறுவோம் என்றருளிச் செய்தனர். (தொடரும்)

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

(மலர் 31, இதழ் 7, பக்கம் 404 - இன் தொடர்ச்சி)

[திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில் மஹோற்சவம் 24—5—72 முதல் சிறப்பாக நடைபெற்றது. திருவிழா நாட்களில், ஆண்டு தோறும் நிகழ்வதுபோல் இவ்வாண்டும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டில் சமய ஒருமைப்பாட்டை விளக்கும் முறையில் பல சமயங்களின் கருத்துக்களை எடுத்து விளக்கி அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அவற்றின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.]

27—5—72 சனிக்கிழமை நாலாம் திருநாள்; சிதம்பரம் டாக்டர். திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் ஆற்றிய தொடக்கவுரைச் சுருக்கம்.

பல்லாண்டுகளாக இத்திருமடத்தோடு நெருக்கமான தொடர்புடையவன் நான்; சிறந்த குருபக்தியும் உடையவன். அதனால்தான் இங்கே சிறப்புரையாற்றும் பணி எனக்குக் கிடைத்திருக்கிறது. பற்பல பிறவிகளில் செய்த நல்லதவமே திருமடத்தோடு தொடர்புகொள்ளவும், குருமகாசந்நிதானத்தின் அருளைப் பெறவும் செய்திருக்கிறது என நம்புகிறவன் நான். அண்மையில் காசியம்பதியில் அடைந்துபோன திருப்பனந்தாள் மடம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் ஹஸ்த விசேடம் உடையவர்கள். அவர்கள் திருக்கரத்தால் அபிடேகம் செய்விக்கப்பெற்ற நம்முடைய குருமகாசந்நிதானம் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு அருளாட்சி செலுத்திச் சைவப்பயிர் தழைக்கப் பாடுபடுவார்கள் என்பது திண்ணம்.

அன்பு, அருள், சர்வஜீவ தயவு இவற்றையே எல்லா மதங்களும் போதிக்கின்றன. மற்ற உலக மதங்கள் ஒரு காலவரையறைக்குட்பட்டன. சைவம் காலங்கடந்த தொன்மையுடையது. மக்களிடையே ஒருமைப்பாடு வேண்டுமென்பதே இம்மாநாட்டின் நோக்கம். நாத்தீகம் வேகமாகப் பரவிவரும் இக்காலத்தில் சமய வேறுபாடுகளைக் கடந்து கடவுள் நம்பிக்கை உடையவர்

கள் அனைவரும் ஒன்றுபடவேண்டுவது மிக மிக இன்றியமை யாதது. மன அமைதியை இறைவன் திருவருளாலேயே பெற முடியும். வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதும் தருப வன் சிவபெருமான் என்பர் மணிவாசகப்பெருமான். பெரிய வற்றுளெல்லாம் பெரியது தொண்டர்தம் பெருமை என்கிறார் ஔவையார். சாதி, சமய, மொழிப் பூசல்களை நாம் கடக்க இம் மாநாடு துணைபுரியும் என்று நம்புகின்றேன்.

அடுத்து சென்னை ஜீவபந்து திரு. ஸ்ரீபால் அவர்கள் 'ஜைனம்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரைச் சுருக்கம்.

கி. பி. 7ஆம் நூற்றாண்டுக்குப்பின் சைவ மடங்களில் ஜைனத்திற்கு இடமே இல்லாதிருந்தது. இன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அதனைத் தவிர்த்து ஒரு புது முயற்சி மேற்கொண்டு என்னைப் பேசப் பணித்திருக்கிறார்கள். கி. மு. நூற்றாண்டுகளில் சைவமும், ஜைனமும் ஒன்றாகவே இருந்தன. இருமதத்தினரும் திருக்கயிலாயத்தையேவணங்கும்வழக்கமுடைய வர்களாயிருந்தனர். ஜைனத்தின் முதல் தீர்த்தங்கரர் ரிஷப தேவர் வீடு பெற்றது கைலாய மலையே என்பர் இம்மதத்திற்கு 'ஜினதருமம்' என்ற பெயர் பிறமதத்தாரால் தரப்பட்டது, இல்லறம், துறவறம் என்ற இருதருமங்களையுமே ஜைனம் உடன் படுகிறது. இல்லறம் - அனுவிரதம் எனப்படும்; துறவறம் மகா விரதம் எனப்படும். 10 வகைப்பட்ட வெவ்வேறு அறங்களின் கூட்டமே இல்லற அறமாகிய அனுவிரதம். கொல்லாமை, வெஃகாமை, புறங்கூறாமை முதலியன இல்லறத்தில் வற்புறுத்தப் படுகிறது. தமிழகத்தில் கி. மு. நூற்றாண்டுகளில் வெளியிடப் பெற்றதாகக் கருதப்படும் பிராமி மொழிக் கல்வெட்டுக்கள் 18ம் ஜைனச் சார்புடையனவே.

ஜைனத்தின் 23 தீர்த்தங்கரர்களுக்குப்பின் உதித்த 24வது தீர்த்தங்கரரே மகாவீரர் 'கடையிலாஞானம்' என்பது ஜைனக் கோட்பாடு. இச்சொல் கம்பராமாயணத்தில் குறிக்கப்படுகிறது. தொல்லை நல்லறம் மறந்ததென்னை' என் வாலி இராமபிரானை வினவுவதாகக் கம்பன் விரிப்பதில் 'தொல்லை நல்லறம்' என்பது சாதி சமய வேறுபாடுகளற்ற ஜைனத்தின் அஹிம்சையையே யாகும்.

நாத்திகவாதிகள் என்பார் எதனையும் உடன்படாத சூனிய வாதிகளே; ஜைனர் நாத்திகர் அல்லர். கடவுளைத்தவிர மற்ற வற்றை ஜைனர் உடன்படுகின்றனர். "இந்த உலகத்தை கடவுள் படைக்கவில்லை; இது இயற்கை; இதன் தோற்ற -

அழிவுகள் தெரியாது. இது ஒருவனால் படைக்கப்பட்டதென்றால் ஏன்? எதிலிருந்து, எதைக்கொண்டு, படைக்கப்பட்டது என்ற வினா எழும். இதற்கு விடையில்லை. இதுவே ஜைனத்தின் உயிர்க்கொள்கை. புத்தரும் - மகாவீரரும் அஹிம்சையைப் போதித்தனர். ஆனால், பௌத்தம் தானே இறந்த உயிரை உண்ண அனுமதித்தது. ஜைனம், இந்நிலை உயிர்களின் சாக்காட்டை எதிர்நோக்கச் செய்யும் என எதிர்த்தது.

மிகுபொருள் விரும்பாமை என்ற ஜைனக்கொள்கை அதற்கு எதிர்ப்பினை உருவாக்கிற்று, ' நடுவின்றி நன்பொருள் வெஃகின் ' என்ற குறளில் ' நன் ' எனவள்ளுவர் சுட்டுவது மிகுபொருளையேயாகும். ஜைனத்தில் பெண் துறவியர் இருந்தனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உண்டு.

ஜைனத்தில் துறவு நிலை 4 வகைப்படும்.

1. முதலில் பிரமச்சரியமும்-ஐம்பத்து நான்கு வயதுக்குமேல் துறவுகொள்ளுதலும்.
2. ஆடையொடு வெளிச்செல்வது.
3. கௌபீனமுடன் வெளிச்செல்வது.
4. நிர்வாண நிலை.

அடுத்து, பண்டாரவாடை, திரு. ராஜ்முகமது அவர்கள் ' உலக ஒருமைப்பாடு ' என்ற தலைப்பில் ஆற்றிய உரைச் சுருக்கம்.

உலகம் பேதங்களைக் கடந்து ஒற்றுமைப்பட வேண்டுமென்பதே சமய ஸ்தாபகர்களின் எண்ணமாகும். பேதங்களற்ற ஒருமைப்பாடு மலர வேண்டுமென்ற குறிக்கோளில், ஒவ்வொரு சமயத்தாரும் தத்தமக்கு இசைவான வேறுபட்ட கொள்கைகளைக் குறித்தனர் என்றாலும், அனைவரும் மக்களிடையே பேதங்கள் அகல வேண்டுமென்பதிலே ஆர்வங் காட்டினர். ஏதேனும் ஒரு அடிப்படையில்தான் ஒருமைப்பாடு நிகழ முடியும் என்று சமய ஸ்தாபகர்கள் கருதினர். மதம் அதற்குக் கருவியாயிற்று. முற்காலத்தே மதத்தின் பேராலும், சமயத்தின் பேராலும்; பூசல்களும் பேதங்களும் கிளைத்தன. கற்றறிந்தவர்கள் உலக சமயங்களிடையே காணப்படும் பொதுக் கருத்துக்களின் வழியில் ஒருமித்த உலகைக்காண முயலவேண்டும் எனக் கூறி, பல்வேறு சமயங்களிடையேகாணப்படும்ஒருமித்தகோட்பாடுகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டினர்.

**28—5—72** ஞாயிற்றுக்கிழமை ஐந்தாம் திருநாள் தஞ்சை இந்து சமய அறநிலையத் துணை ஆணையர் திரு. கோதண்டபாணி **B. Sc., B. L.** அவர்கள் ஆற்றிய சிறப்புரைச் சுருக்கம்.

தருமையாதீனத்தில் தற்போது எழுந்தருளியிருக்கும் குருமகாசந்நிதானம் அவர்கள் சமயப்பணியும், திருக்கோயில்களும் சிறப்படைய வேண்டுமென்று இடையருது பாடுபட்டு வருகிருர்கள். 27 திருக்கோயில்களும் 27 விண்மீன்களைப்போல அவர்கள் ஆட்சியில் பிரகாசிக்கின்றன. சைவசமயத்தின் வளர்ச்சியில் நாட்டம் கொண்டு தேவார பாடசாலை, ஆகம பாடசாலை, தமிழ்க்கல்லூரி முதலியவற்றைச் சிறப்பாக நடத்தி வருகிருர்கள் அவர்கள் இவ்வாறு சமய ஒருமைப்பாட்டுக்காக மாநாடுகள் நடத்துவதற்கு நாம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வது கடமையாகும்'. இந்த நன்முயற்சியில் ஈடுபட்டு மாநாட்டுக்குத் திரளாக வந்திருந்து கேட்டு உய்வதே ' நன்றிக் கடப்பாடாகும்

சென்னை, திரு. கீ. இராமலிங்கனுர் எம். ஏ., அவர்கள் 'சமய நோன்புகள்' பற்றி ஆற்றிய உரைச்சுருக்கம்.

மனத்தை ஊன் நோக்கிச் செலுத்தாது வான்நோக்கிச் செலுத்தவேண்டும். எல்லாம் உன்செயல் என்பதே சிவபுண்ணியமாகக் கருதப்படும். மனத்தைத் தூய்மைப்படுத்தச் செய்யப்படும் முயற்சியே நோன்பு எனப்படும். 'சீலமின்றி... நோன்பின்றி,... செறிவு இன்றி... அறிவு இன்றி' என்று மணிவாசர் கூறுவதில் சீலம் – நன்னடத்தை – சரியை எனப்படும்; நோன்பு என்பது கிரியை; செறிவே, யோகமாகும்; அறிவே, ஞானமாகும்.

விரதம் என்ருல் ஆராய்ந்து எடுத்துக்கொள்ளுதல் என்பது பொருள். விரதம் என்ருல் இன்னது என்பதனைப் பரிமேலழகர் அழகுற விளக்குவார். நோன்பு என்ருல் பொறுத்துக்கொள்ளுதலாகும். விரதத்தால் பெறுவது மனஉறுதி. நோன்பும் விரதமும் ஒன்றே. எல்லாச் சமயத்திலும் நோன்புகள் உண்டு. ஆண்டாளும், மணிவாசகரும் மகளிர் மேற்கொள்ளத்தக்க விரதங்களை அழகுற எடுத்துரைக்கின்றனர்.

அடுத்து மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ., அவர்கள் 'பெரியபுராணம் வாழ்வியல் நூல்' என ஆற்றிய உரைச் சுருக்கம்.

, மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என முதன் முதல் மனித இனத்திற்கு நம்பிக்கை ஊட்டிய சமயம் சைவசமயம். உலக சமயங்கள் எல்லாம் இவ்வுலகம் துன்பமயமானது; வாழத் தகுதியற்றது என்ற நேரத்தே சைவத்தில் இக்கருத்து எழுந்தது. பெரியபுராணம் மட்டுமன்று; பன்னிரு திருமுறைகள் யாவுமே வாழ்வியல் கூறுவனவே. ஞானசம்பந்தர் 'வைகலும்' என்ற சொல்லால் உறுதிப்படுத்தி, இவ்வுலக வாழ்வுக்கு மட்டுமில்லை, அடுத்த உலக வாழ்வுக்கும் குறைபாடு ஏதுமில்லை என்பதனை வலியுறுத்துகிறார்.

இதுவே 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்' எனத் திருவள்ளுவரால் குறிப்பிடப்படுகிறது. வாழ்வியலை, பண்பாட்டை, மொழியைக்காத்து வாழ்வு தந்த ஞானசம்பந்தரைச் 'சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் – இனி எதிர்காலத்தின் சிறப்பும்' தந்தவர் எனக் கூறி, பாண்டி நாட்டுக் குலச்சிறையார் பாராட்டுகிறார். திண்ணனையும் – ஞானசம்பந்தரையும் தவறுகளுக்காகக் கோல்கொண்டு ஓச்சும்போது சேக்கிழார் காட்டும் உலகியல் வேறுபாடு வாழ்வியலை வகுக்கிறது. வறுமைக் காலத்தும் கொள்கைவழி நிற்பவர்களைத் தேடிவருபவன் சிவபெருமான் என்பதே பெரியபுராணக் கோட்பாடு.

சிறுத்தொண்டர், இயற்பகை முதலியோர் வரலாறுகள் மிகஉயர்ந்த நிலைமையிலிருந்து மதிப்பிட வேண்டிய வரலாறுகளாகும்.

நாம் வைத்திருக்கும் குறிக்கோளின் அடிப்படையில்தான் வாழ்வியலை மதிப்பிடவேண்டும். கொள்கைக்காக வாழ்ந்து இடையூறு வரும்போது சாவதே வாழ்வியல். அவ்வாற்றலே வாழ்வின் சிறப்பு. அத்தகு வீர வாழ்வு மேற்கொண்டாரே பெரியபுராண அடியார்கள்.

அயலறியாமை வாழ்ந்த திருநீலகண்டர் வாழ்வு, எப்படி வாழ்வது, எப்படி நிலைமைகளைச் சமாளிப்பது என்ற உண்மைகளை விளக்குவன. மனித மனத்தின் உறுதி அப்பரின் கயிலை யாத்திரையில் வைத்து விளக்கப்படுகிறது. இவ்வாறு பெரியபுராணம் வாழ்வியல் முறையைப் பல கோணங்களில் வகுத்துக் காட்டுகிறது.

உ

குருபாதம்

திருப்பனந்தாள்

**ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயில் தரிசனத்திற்கு**

**ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் உடன்வர**

தருமை, துறைசை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் எழுந்தருளியபோது ஆலயப்பணியாளர் அளித்த வரவேற்பில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

திருவாய்மலர்ந்தருளிய

# ஆசியுரை

மெய்யன்பர்களே! திருப்பனந்தாள் ஆலயப்பணியாளர்களே! குடிமக்களே!

இன்று ஒரு நல்லநாள் திருப்பனந்தாள் தேவஸ்தான தரிசனத்திற்குத் தருமை, துறைசை இரு மகாசந்நிதானங்களும் எழுந்தருளியுள்ளனர் தலவிருக்ஷத்தின் பெயரால் விளங்கும் தலங்கள் பல. அவற்றுள் ஒன்று திருப்பனந்தாள். இங்குத் தலவிருக்ஷம் பனை. ஊரின் திருப்பெயர் திருப்பனந்தாள். ஆனால் இங்குள்ள கோயிலின் பெயர் தாடகையீச்சரம் என்பது. தாடகை வழிபட்டதால் தாடகையீச்சரம் எனவழங்கப்படுகிறது. இங்குத் தாடகையின் அன்புக்குப் பெருமான் தலைவளைந்தான்.

1300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருஞானசம்பந்தர் வழிபாட்டிற்கு வந்தபோது பாடிய தமது பாடலில் தாடகையீச்சரம் என்று இத் தலத்தைக் குறித்துள்ளார். இராமாயணத்தில் வரும் தாடகை வேறு. இங்குக் கூறப்பெறும் தாடகை வேறு. இவள் இத் தலத்தில் பெருமானுக்கு அன்போடும், ஆசாரத்தோடும் மலர்மாலை தொடுத்துக் கொடுக்கும் பணியை மேற்கொண்டிருந்தாள். மலர் எடுக்கும்போதும் மலர்மாலை தொடுக்

கும்போதும் வாயைக் கட்டிக்கொண்டு வாய்பேசாது இருக்க வேண்டும் என்று புட்பவிதியில் கூறப்படுகிறது.

அம்முறைமை தவருது மலர் எடுத்துத் தொடுத்து அணிவித்து வழிபாடுசெய்துவந்தாள் தாடகையென்னும்பெண். அவள் ஒருநாள் தனது வழிபாட்டின்போது பெருமானுக்கு மலர்மாலை அணிவிக்கையில் ஆடை நெகிழ்ந்தது. ஆடையைச் சரிசெய்து கொண்டு மாலை அணிவிக்கலாம் என்றால் ஆசாரம் குறைந்து விடுமே என்று பரிதவித்தாள். ஆசாரம் குறையாமல் மாலை அணிவிக்க முயன்ருள். தன் இரு முழங்கைகளினலும் ஆடையை இடுக்கிக்கொண்டு மாலை அணிவித்தாள். பெருமான் தாடகையின் அன்புக்கு இரங்கித் தலைவளைந்து மாலையை ஏற்றுக் கொண்டார். உள்ளபடியே அன்புசெலுத்தி மலர்மாலை அணிவித்ததால் சுவாமி தலைவளைந்தார்.

சில பல ஆண்டுகள் கழித்து, அங்கு வழிபாட்டிற்கு வந்த சோழமன்னன், பெருமான் திருமேனி சாய்ந்திருப்பதைக் கண்டு வருந்தி, நேரே நிமிர்த்தி வழிபட எண்ணினன். தாடகையின் அன்புக்குத் தலைவளைந்த பெருமானை அன்பினல் நிமிர்க்க முயன்ருன். அதனல் அவன் தன்னுடைய நால்வகைப் படைகளையும் பயன்படுத்தி இலிங்கத்தை நிமிர்க்க முயற்சி செய்தான்; நிமிர்க்கமுடியவில்லை.

"செங்கண் வெள்ளேற்றின் பாகன் திருப்பனந்தாளில் மேவும்
அங்கணன் செம்மைகண்டு கும்பிட அரசன் ஆர்வம்
பொங்கித் தன்வேழமெல்லாம் பூட்டவும் நேர்நில்லாமைக்
கங்குலும் பகலும் தீராக் கவலையுற்றழுங்கிச் செல்ல"

என்பது சேக்கிழார் வாக்கு.

பெருமான் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை. சோழனும் அன்போடுதான் நிமிர்க்க முயன்ருன். ஆனல், அந்த அன்பு தாடகை அன்பின் அளவிற்கு இல்லை.

திருக்கடவூரில் குங்குலியத் தொண்டுசெய்து வந்தார் குங்குலியக்கலய நாயனர். அவர் சோழ மன்னனின் செயலை அறிந்தார். சோழ மன்னன் ஈடுபட்ட பணியில் தாமும் ஈடுபட விரும்பினர். திருப்பனந்தாள் சென்று,

"தேனலர்க்கொன்றையார்தந் திருமேனி
பூங்கச்சேய்ந்த
மானவன் கயிறுபூண்டு கழுத்தினல்
வருந்தலுற்ருர்."

இலிங்கத்தில் சுற்றியிருந்த கச்சில் முடியிட்ட கயிற்றின் மற்றொரு முனையைத் தம் கழுத்தில் சுருக்கிட்டு இழுத்தார். அன்புக்கிரங்கும் அண்ணலும் நேர்நின்றார். ஆழமான அன்புக்கு - பக்திக்குக் கட்டுப்படுபவன் ஆண்டவன் என்பதை இவ்வரலாறு விளக்குகிறது. இங்கு ஆலயப்பணியாளர்கள் அளித்த வரவேற்பிதழில் இரு மகாசந்நிதானங்களையும் அப்பர் சம்பந்தரோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

சிந்தை இடையறு அன்பும் திருமேனிதனில் அசைவும் திகழ விற்றிருக்கிறார்கள் துறைசையாதீன மகாசந்நிதானம் அவர்கள். அம்பலவாணர் என்ற பெயர் தாங்கியுள்ளார்கள் அவர்கள். அம்பலவாணர் பஞ்சாக்கரமே வடிவானவர். பஞ்சாக்கர தேசிகர் தான் திருவாவடுதுறை ஆதீனத்தை ஸ்தாபித்தார்கள். (குரு) ஞானசம்பந்தர் தருமையாதீனத்தை ஸ்தாபித்தார். ஞானசம்பந்தர் பெயரும் பஞ்சாக்ஷரம்தான். இது பக்த பஞ்சாக்ஷரம்; ஒற்று நீக்கி எண்ணினால் பஞ்சாக்ஷரம். பஞ்சாக்ஷரத்தை ஓதினால் நலம் அடையலாம். பெருமிழலைக்குறும்பர் சுந்தரமூர்த்தி நாயனார் பெயரை ஓதி நலம்பெற்றார். அப்பூதி அடிகள் திருநாவுக்கரசரின் பெயரைச் செபித்து நலம் பெற்றார்.

"மீனவன் செவியினூடு மெய்யுணர் வளிப்போர் கூற
ஞானசம்பந்தர் என்னும் நாமமந்திரமும் செல்ல"

என்று சேக்கிழார் குறிப்பிடுவார். ஞானசம்பந்தரை அழைத்தல் நலம் என்று மங்கையர்க்கரசியார் பாண்டிய மன்னனுக்கு அறிவித்தவுடன் அரசனின் உடல் வெப்பு சிறிது குறைந்தது. இதுவும் பக்த பஞ்சாக்ஷரத்தின் மகிமை. பஞ்சாக்ஷரம் முக்கியமானது. பஞ்சாக்ஷரத்தை உபதேசம் செய்யும் மரபில் திருக்கயிலாய பரம்பரையில் வந்தவர்கள் இரு மகாசந்நிதானங்களும். பஞ்சாக்ஷரத்தை உபதேசவாயிலாகக் கேட்டு மக்கள் உய்தி பெறுவார்களாக.

தாடகை அன்புக்குப் பெருமான் தலைவளைந்தார். நமது முத்துக்குமாரசுவாமித் தம்பிரானின் அளவிலாத அன்புக்குக் கட்டுப்பட்டு இருமகா சந்நிதானங்களும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்திற்கும், திருக்கோயில் தரிசனத்திற்கும் எழுந்தருளியுள்ளார்கள். உங்கள் முன்னிலையில் இருமகா சந்நிதானங்களையும் இருக்கச்செய்த பெருமை அவர்களுக்கு உண்டு.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும், காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளும் காசியில் முக்திபெற்றமை குருவும்

தருமையாதீனம் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்
மண்டலாபிஷேகக் கிருத்திகை விழா



தருமையாதீனம்
26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமியை வழிபடுதல்




பஞ்சமூர்த்திகள்
திருவீதியுலாவிற்கு எழுந்தருளல்

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்திற்கு
தருமை, துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள்
எழுந்தருளியபோது



தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
கைலாகு கொடுத்து வரவேற்றல்

தோரணங்களால் ஒப்பனை செய்யப்பெற்ற
திருப்பனந்தாள் கீழவீதியிலுள்ள ஸ்ரீ விநாயகர்
திருக்கோயிலுக்கு முன்பாக




தருமை, துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களை
வரவேற்பதற்காகப் பணிவுடனும் பக்தியுடனும்,
ஸ்ரீ காசிமடத்துப் பணியாளர்களும் பெருமக்களும்
எதிர்நோக்கியிருத்தல்.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில்:



தருமை, துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களை
கொலுவில் எழுந்தருளச்செய்து
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான்
சுவாமிகள் வழிபாடு செய்தல்



தருமையாதீனம்
26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான்
சுவாமிகளுக்குப் பொன்னாடை போர்த்தி ஆசியருளல்

தருமையாதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயில் வழிபாட்டிற்குப் பின்னர்



அன்பர்கள் புடைசூழ
வரவேற்புக் கூட்டத்திற்கு எழுந்தருளல்



வரவேற்புக் கூட்டத்தின் போது
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாசி வழங்கல்

சிஷ்யரும் ஒருபெரு நிலையைப் பெற்ற திருவருள் வியப்பாக உள்ளது. அண்மையில் முக்திபெற்ற காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் 533 அறக் கட்டளைகளை நிறுவியுள்ளார்கள். குங்குலியக்கலயனர் செய்த தொண்டு நிலைபெற வழிவகுத்தார்கள். திருக்கடவூரிலும் திருப்பனந்தாளிலும் கலயனர் தொண்டு நிகழ அறக்கட்டளை வகுத்துள்ளார்கள்.

குங்குலியக்கலயர் அப்பரையும் ஞானசம்பந்தரையும் திருக்கடவூரில் வரவேற்று உபசரித்தார். அதுபோல் இரு மகாசந்நிதானங்களையும், ஸ்ரீ காசி மடத்தில் காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் வரவேற்று உபசரித்தார்கள். ஸ்ரீ காசிமடம் காசிவாசி சுவாமிகளின் அன்பினல் திருப்பனந்தாள் ஆலய தரிசனத்திற்கு எழுந்தருளிய மகாசந்நிதானங்களுக்கு ஆலயப் பணியாளர்களால் வரவேற்பு அளிக்கப்படுகிறது; எல்லாம் இங்குள்ள மக்களின் அன்பு என்றே சொல்ல வேண்டும்.

அன்பின் மிகுதியால் ஒவ்வொருவரும் எங்கள் அருகில் வந்து வணங்கி மகிழ விரும்புகிறீர்கள். பெரிய கூட்டத்தில் அது முடியக்கூடியது அல்ல. நமது தேவஸ்தானத்திற்கு நாம் அடிக்கடி வரும் வாய்ப்பு உண்டு. அப்பொழுது அனைவரையும் சாவதானமாகக் காணவும், விரிவாகப் பேசவும் நேரம் இருக்கும். இப்பொழுது சுருக்கமாக இரண்டொன்றைச் சொல்லவேண்டியுள்ளது.

தேவஸ்தானத்துக்கு உள்ள நிலத்திலிருந்து வரும் விளைவை அருணஜடேசுவரசுவாமி சாப்பிட்டுவிடவில்லை. அதனல் பயன் அடைபவர்கள் அர்ச்சகர் முதல் உள்ள தேவஸ்தானப் பணியாளர்களும், திருவிழாக் காலங்களில் பணிசெய்யும் குடிமக்கள், தொழிலாளர்கள், இசைவாணர் முதலியவர்களும், வழிபாட்டிற்கு வரும் யாத்திரிகர்கள் முதலிய பலருமேயாகும். இதைப் புரிந்து கொள்ளாமல் கோயில் நிலத்தை வைத்துக் கொண்டு யாரோ வாழ்கிறர்கள் என்று யாராவது சொன்னல், அதை நீங்களும் சரி என்று நம்பிவிடக்கூடாது.

இன்றும், நிலத்தை உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்று சட்டம் வந்துவிட்டதாக ஒரு வதந்தி உண்டானதைக் கேட்டுச் சில குடிமக்கள் ஒன்றும் புரியாமல் ஒரு மகிழ்ச்சியடைந்துகொண்டார்கள். ஆனல் இரண்டு நாள் கூட அந்த மகிழ்ச்சி நிலைபெறவில்லை. உடனே அப்படி ஒன்றும் சட்டம் வரவில்லை என்று ஏற்பட்டுவிட்டது. உழுகின்ற மக்களுக்கு

அரசாங்கம் ஏதாவது நன்மை செய்யுமானல் அதைச் செயற்படுத்துவதில் நமது ஆதீனம் முன்னணியில் இருக்கும் என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேம். ஆகவே, குடிமக்களுக்கு ஏதாவது குறைகள் இருக்குமானுல் அதை நம்மிடம் நேராகவே தெரிவித்துக் கொள்ளலாம்; அதற்கு வேண்டிய பரிகாரம் உடனடியாகவே செய்யப்படும். குடிமக்கள் நம்முடைய மக்கள் என்றுதான் ஆதீனம் கருதியிருக்கின்றது. குடிமக்களும் அது போல ஆதீனம் நம்முடையது என்று அன்புகொள்ள வேண்டும். அப்படித்தான் இருக்கின்றீர்கள்; என்றலும் இடையிடையே சில வதந்திகளால் உங்கள் உள்ளம் எப்படியோ கலக்கம் அடைகின்றது; அத்தகைய கலக்கம் தேவையில்லை.

மக்கள், கடவுளிடம் பக்திசெலுத்தி நன்மையடைய விரும்புகிறர்கள். கடவுட் காரியங்களுக்குப் பயன்படும் தேவஸ்தான நிலத்தைக் குத்தகைக்கு வைத்திருப்பவர்களும் ஆண்டவனுக்குரிய பங்கைத் தவருமல் செலுத்தி ஆண்டவன் அருளை நிரம்பப் பெறுவார்களாக.

இன்று இருமகாசந்நிதானங்களும் இங்கு எழுந்தருள்வதற்குக் காரணமாய் உள்ள காசிமடத்துத் தம்பிரான் அவர்களுக்கும் இங்குப் பெருந்திரளாகக் கூடி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்பு அளித்த மக்கள்பலருக்கும் குருவருளாலும், திருவருளாலும் எல்லா நன்மைகளும் இனிது பெருக வாழ்த்துகிறேம்.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### தருமபுரம் ஆதீனம்

### ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தரிசனம் எங்களுக்குக் கிடைத்ததற்கரிய பேருக அமைந்தது. இவ்வாலயத்தின் விசாலமும் தூய்மையும் மனதைத் தொடுவனவாகவும் மிகுந்த தெளிவையும் அமைதியையும் அளிப்பனவாகவும் இருக்கின்றன. வெப்பம் தெரியாமல் ஒளிமட்டும் வீசி பக்தகோடிகள் ஸ்ரீ சட்டைநாத சுவாமிகளின் திருவுருவம் காணக்கூடிய வகையில் வசதிகள் அமையப்பெற வேண்டுகிறேம். நிர்வாகிகளின் பக்தி சிரத்தையான ஆற்றலில் ஆலயத் திருப்பணிகள் மேலும் பொலிவுறும் என்று திடமாக நம்புகிறேம்.

இப்படிக்கு,

(ஒ-ம்.) இரா. நடராஜன்

12—5—72. பொறியியலாளர், சென்னை.

# செய்திகள்

திருப்பனந்தாளில்

## தருமை, துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கட்கு

## வரவேற்பு

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டதற்கு இணங்கத் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம், துறைசை ஆதீனங்களின் மகாசந்நிதானங்கள் 28—6—72 புதவாரம் காலை 9 மணிக்குத் திருப்பனந்தாளிற்கு எழுந்தருளினார்கள். வரும்வழியில் ஆதீன சம்பிரதாயப்படி திருப்பனந்தாள் நகர எல்லையிலேயே நல்லதொரு அலங்காரப் பந்தல் அமைத்து தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தின் சார்பில் தருமை துறைசை இருபெரும் மகாசந்நிதானங்களுக்கும் ஆலய மரியாதைகளோடு திருவருட் பிரசாதம் கொடுத்து அருளிப்பாடு செய்யப்பெற்றது.

திருப்பனந்தாள் வாரணசி நிலையத்தருகே ஸ்ரீகாசிவிநாயகர் சந்நிதியில் எடுபிடி, விருது, மேள வாத்தியங்களுடன் பெருந்திரளான அன்பர் குழாத்திடையே காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எதிர்நோக்கியிருந்து இருமகாசந்நிதானங்களையும் சிறப்பாக வரவேற்றார்கள். ஸ்ரீ காசி விநாயகர் ஆலய தரிசனம் முடிந்தபின், மேளதாளம், திருமுறைப் பாராயணம் முதலிய சிறப்புக்களுடன் மகாசந்நிதானங்களை, காசி மடத்திற்குள் எழுந்தருள்வித்தபொழுது முதற்கண் ஸ்ரீ விசுவநாதசுவாமி ஆலய தரிசனம் சிறப்பாக நடைபெற்றது. பின்பு இரு மகாசந்நிதானங்களையும் ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் கொலுமண்டபத்திற்கு எழுந்தருள்வித்து அருட்கொலு அமர்த்தி, அபிடேக அலங்கார தீபாராதனை முதலியவற்றால் முறைப்படி வழிபாடு செய்து வணங்கிக் குருவருள் பெற்றார்கள். மாயூரம், கும்பகோணம், தருமை, திருவாவடுதுறை முதலிய பல இடங்களிலிருந்தும் வந்திருந்த பெருமக்கள், உள்ளூர்ப் பெருமக்கள், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிப்

பேராசிரியர்கள் முதலிய அன்பர்கள், பக்தர்கள் பலரும் கொலுக் காட்சியைக் கண்டு களித்துப் பாத காணிக்கைகள் செலுத்தி வணங்கிக் குருவருட் பிரசாதம் பெற்று மகிழ்ந்தார்கள். பகல் 12 மணிக்குக் காசி மடத்தில் மாகேசுவர பூசை மிகச் சிறப்பாக நிகழ்ந்தது.

இரவு 7 மணிக்குச் சந்தியானுட்டானத்தின் பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் காசி மடத்தினின்றும் புறப்பட்டுத் தருமை யாதீனத்தின் கட்டளை மடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களைத் தரிசிக்க வந்திருந்த பொதுமக்களின் கூட்டம் கட்டுக்கடங்காதிருந்தது.

ஆலய முகப்பில் உள்ள தருமை ஆதீனம் கட்டளைமடத்துக்கு இருபெரு மகாசந்நிதானங்களையும் வரவேற்று கொலுவிலமர்த்தி ஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் உடன் இருக்க வேளூர் தேவஸ் தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளும் திருநள்ளாறு கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளும் குரு வழிபாடுகள் செய்து குருப்பிரசாதம் பெற்றார்கள். ஆலயப் பணியாளர்களும் அன்பர்களும் வணங்கி விபூதிப் பிரசாதம் பெற்றனர்.

பின்பு இருகுருமகாசந்நிதானங்களும் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோயிலுக்கு எழுந்தருள, பெருங்கூட்டத்துடன் சுவாமி அம்பாள் சந்நிதிகளில் தரிசனம் நன்கு நடைபெற்றது. பின்பு மேலக்கோபுரத்தை அடுத்துள்ள தட்டிசுற்றி மண்டபத்தில் மக்கட்கூட்டம் சூழ்ந்திருக்க வீற்றிருந்து அருட்காட்சி வழங்கினார் கள். ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி ஆலயப்பணியாளர்கள் சார் பில் தருமை, துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கட்கும், ஸ்ரீகாசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகட்கும் வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்பட்டது. தருமையாதீனம் 26 ஆவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ' ஆசியுரை வழங்கியருளினார்கள்.

துறைசை ஆதீனம் 22 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளின் ஆசியை துறைசையாதீனக் கண்காணிப்பாளர் திரு. சங்கரன்பிள்ளை அவர்கள் தெரிவித்து, கோயில்களும், மடாலயங்களும் மக்களுக் காகவே இருக்கின்றன. அதில் உள்ள சொத்துக்களும் மக்களுக்காகவே பயன்படுகின்றன. சோஷலிச அடிப்படையிலே மடாலயங்களும் தேவாலயங்களும் மிகப்பழங்காலந்தொட்டு

இயங்கி வந்துள்ளன. மடாலயங்களும் தேவாலயங்களும் மக்கள் எல்லோருக்கும் உரியதேயன்றி தனி மனிதனுக்கு உரிய தன்று என்று குறிப்பிட்டார்கள்.

பின்னர் காசிமடம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தங்கள் விண்ணப்பத்திற்கு இணங்க எழுந்தருளிவந்து அனைவர்க்கும் அருட்காட்சி வழங்கினமைக்கு இருமகாசந்நிதானங்கட்கும் வணக்கமும், நன்றியும் தெரிவித்துக்கொண்டு, வரவேற்பு விழாவில் பங்கு கொண்டு பணியாற்றிய காசிமடத்துக் குடிகள், பணியாளர்கள், ஸ்ரீஅருணஜடேஸ்வரர் ஆலயப் பணியாளர்கள் குடிமக்கள் முதலிய பலர்க்கும் அன்புரையும், வாழ்த்துரையும் வழங்கியருள, வரவேற்பு விழா இனிதே நிறைவுற்றது.

* இந்த ஆசியுரை தனியாக 474 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

---

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adheenam

Sri Sattanathaswamy Devasthanam, Sirkali.

"On 29—11—67, I came to Sirkali to assume charge as District Munsif. As is usual with me, I entered the premises of the holy temple and took permission from the presiding deities to take charge. I recorded my impression on 29—11—67 after visiting and worshipping in the temple. The temple has continued to give me peace of mind and happiness. The temple premises continues to be neat and clean. The Superintendent is very efficient and he has to be congratulated and encouraged for the clean maintenance of the temple. I have been transferred to Madras as Registrar of Court of Small Causes. I have taken leave of the deities of the temple."

(Sd.) T. Pattabiraman,
District Munsif.

31—3—72.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

( பரிதாபிஹு ஆடிமீ 1உ முதல் 32உ முடிய )

( 16—7—72 முதல் 16—8—72 முடிய )

பரிதாபி வருஷம் ஆடிமீ முதல் தேதிகாலை முதல் யாமத்தில் 4 நாழி 42 விநாடிக்கு கடக லக்கினத்திலேயே ஸ்ரீ லோக ரக்ஷகரான சூரியபகவான் மிதுனராசியிலிருந்து கடக ராசிக்கு தக்ஷிணாயன புண்ணியகால பலத்தோடு ஆடிமாதப் பிரவேசம் செய்கிறார். பிரவேசகால பலன், சமஸ்த லோகங்களுக்கும் க்ஷேமமும் தனதான்ய விருத்தியும் சுபிட்சமும் தெய்வசக்தியும் தர்மமும் ஓங்கும். சாதுக்கள் பக்தர்கள் தர்மிஷ்டர்கள் ஓங்குவார்கள். பிரகஸ்பதி பகவானே ஷ வருஷத்துக்கு ராஜ மந்திரித்துவம் வகித்து நடப்பதால் சுபமே ஜயிக்கும். ஆனால் கலிபலன் 5073ல் யௌவன பலத்தோடு ஷ மாசத்தில் நவநாயகர்கள் ராஜாவுக்கு 6-8ம் ராசிகளில் தக்ஷிணாயன பிரவேச காலத்தில் சநி, குருவுக்கு 6ல் சுக்கிரனுடன் சேர்ந்தும் மற்ற சூரியன் செவ்வாய், புதன் இவர்கள் குருவுக்கு 8ல் கேதுவுடன் சேர்ந்தும் சஞ்சரிப்பதால், இந்தியா மாத்திரமில்லாமல் உலகம் பூராவிலும், அதர்மம் ஓங்கிய தேசங்களில் இயற்கைக் கோளாறுகளாலும் பேசும் தெய்வமாக நேரில் நடமாடும் மானிட தேவர்களாலும் மானுஷாத் புதங்களும் ஏற்படும். தர்மமே ஜயிக்கும். கடவுள் காப்பார்.

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தூர தேச யாத்திரையும் தீர்த்த யாத்திரையும் ஏற்படும், அடிக்கடி பந்துக்களுடைய சேர்க்கையும், தெய்விக காரியமும் இருந்து கொண்டு இருக்கும். விவகாரம் ஜெயிக்கும். சஸ்யங்கள் விருத்தியாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். எல்லாக் காரியங்களும் தாமதத்தோடு நடைபெறும். தொழில் சம்பந்த மாய் அடிக்கடி மாறுதல்களும் மனக்கவலைகளும் உண்டுபண் ணும். வியாதிகள் நிவர்த்தியாகும். கடன்கள் நிவர்த்தியாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். பொருளாதாரத்தில் அதிக விரயம் காட்டும். புதிதான தொழில் ஆரம்பம் ஆகும். மேலோர் பெரியோர்களின் உதவியில் எல்லாக் காரியங்களும் சாத்தியமாகும். குடும்பத்தொல்லைகள் இருந்துகொண்டு இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையேதரும். தெய்வசக்தி பிரகாசிக்கும். புதிதாகப் பல காரியங்களைத் தெய்வ பலத்தால் சாதிக்க முடியும். விவகாரம் சமரசமாகும். நஷ்டதனம் வந்து சேரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும். உத்தி யோகத்தில் மேல்பதவிகளும் இடம் மாறுதலும் உண்டாகும். குடும்ப சுகம் ஓங்கும். வியாதி சாந்தியாகும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். உறவினர்களாலும், சிநேகிதர்களாலும், புத்திராதிகளாலும் கவலை ஏற்படும். தற்காலம் நடந்துவரும் தொழிலில் பலவித மான மாறுதல்கள் ஏற்படும். செலவினங்கள் அதிகமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும். அதிக மான சஞ்சாரமும், சுப சோபனதிகளால் அதிகமான செலவு

களும் ஏற்படும். அடிக்கடி தெய்வீக காரியங்களும், தெய்வவழிபாடும், புண்ணிய பலன்களும் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். வம்சம் விருத்தியாகும். புத்திரோத்பத்தி ஏற்படும். புத்திராதிகளால் பலவிதமான நன்மைகள் ஏற்படும். உலகபிரசித்தி ஏற்படும், ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும். வரவு, செலவு சமமாகும். அதிக உழைப்புடன் விசேஷமான லாபம் உண்டாகும். புத்திர பௌத்திராதிகளால் நன்மையும் ஏற்படும், தர்ம காரியங்களில் ஈடுபட்டு உலகபிரசித்தி உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம்–உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும். சுபமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். ஆரோக்யம் உண்டாகும். அரசாங்கம் மூலம் நன்மைகள் ஏற்படும். காரியம் அனுகூலமாகும். குடும்ப சுகம் அதிகமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ சதயம் –பூரட்டாதி–¾,

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அடிக்கடி மனம் கவலையாகவே இருக்கும். எந்தக் காரியமும் நிரந்தரமாக சாதிக்க முடியாது. வீண் அலைச்சலும், மனஸ்தாபமும் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத் தரும். தெய்வ பலத்தால் சகலமும் சாத்தியமாகும். எதிர்பாராத ஜீவன லாபங்களும், மேலோர், பெரியோர்களின் அன்பும் குடும்ப சுகமும், புத்திராதிகளால் நன்மையும் ஏற்படச்செய்யும். சதா தெய்வ சிந்தனையாகவே இருந்துகொண்டு இருக்கும். தர்மமே ஜெயிக்கும்.

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

வழங்கியருளிய

# சுதந்திரதின வெள்ளிவிழாச் செய்தி

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே.

திருச்சிற்றம்பலம்

பண்டைக் காலந் தொட்டே பலவகைப் பண்பாடும் பெற்று விளங்கும் நமது பாரத நாடு இடையில் இரண்டு நூற்றுண்டுகள் அந்நியர் ஆட்சியில் தன்னுரிமை இழந்து நின்று, மீளவும் தன்னுரிமை பெற்று, 25 ஆவது ஆண்டில் வெள்ளி விழாக் காண்

ன்றது. இவ்விழா நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

தன்னுரிமை யாவது ஜனநாயகம் அல்லது மக்களாட்சி இம் மக்களாட்சியில் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். 'மன்னர் கள்' என்று சொல்லும்பொழுது எல்லோர்க்கும் மகிழ்ச்சிதான். ஆனால், குடிமக்களாய் இருக்கும் நிலையைவிட, மன்னர்களான நிலையில் ஒவ்வொருவருக்கும் பொறுப்பும் கடமையும் அதிக மாகின்றன. ஆயினும் மக்கள் பொறுப்புணர்ச்சியை விடுத்து, உரிமையைத்தான் கொண்டாடுகிறார்கள். ஜனநாயகம் என்பது எல்லோரும் உழைத்து வாழ்வதேயன்றி, பிறர் உழைக்கத் தாம் சும்மா இருந்து சுகம் பெறுவதல்ல. இயற்கை நியதியும், உழைத்து வாழ அமைந்திருக்கின்றதேயன்றி, சும்மா இருந்து வாழ்வதாக அமையவில்லை. அமைக்கப்படவும் இல்லை.

'உயர்வு' என்பது உழைப்பினால் வருவதேயன்றிச் சோம்ப லால் வருவதன்று. ஆயினும், உழைப்பு இல்லாதவர்கள் உழைப் பினால் உயர்வு பெற்றிருப்பவர்களைக் கண்டு மனம் புழுங்குவது தவிர, உழைத்து முன்னேற முயல்வதில்லை. அந்நிலையில் உள்ளவர்களையும் உழைத்து முன்னேறச் செய்வதே மக்கள் அரசாங்கத்தின் மாட்சிமிக்க மாபெரும் கடமை.

பொறுப்பு, கடமையுணர்ச்சி, உழைப்பு முதலிய பண்பாடு களும் அவ்வவ் உயிர்களின் அறிவு நிலைக்கு ஏற்பவே அமைவன. இயற்கையில் அறிவுத்திறன் பெற்றவர்கள் எவ்வகையிலோ உழைத்து முன்னேறிவிடுகின்றனர். அவர்கள் மற்றவர்களையும் அந்நிலைக்குக் கொண்டுவர முயலுதல் வேண்டும். உலகத்தைப் படைத்த இறைவன் திருவுளக் குறிப்பும் அதுவே. பிறந்த குழந்தை உழைக்க இயலாதவரையில், தாய் பால்கொடுத்து வளர்க்கின்றாள். வளர்ந்தபின் அது தானே பிழைத்துக்கொள்ளு கிறது. வளர்ந்து பலர்க்கு உதவி புரிகின்றது.

பறவை விலங்கு முதலிய பலவும் முதலில் தம் தாயின் உதவி பெற்று வளர்ந்து, பின் தம் இனத்திற்குப் பயன் தருகின்றன.

ஆடு, மாடுகள் மக்கட்கும் பயன்பட்டு மக்கட்கு உதவி செய்தல் வெளிப்படை. தாவரங்களும் முளைக்கும்பொழுது விதையில் உள்ள உணவை உண்டு, பின் மண்வளம், நீர்வளம் முதலிய வற்றைக்கொண்டு வளர்ந்து, பின் மக்கட்கும் பறவை விலங்கு முதலியவற்றிற்கும் பயன் தருகின்றன; இஃது இயற்கை நியதியாய் உள்ளது. இவ்வாறே பிறர் உதவி யால் வளர்ந்து, பின் தமது உழைப்பினால் செல்வத் தைப் பெருக்கிக்கொண்ட மக்களும் அச்செல்வம் பிறர்க்கும் பயன்படச்செய்து வாழ்தல் வேண்டும். செல்வத்தைப் பிறர்க்கு ஈயுங் ஈகை என்பது இங்குப் பிறர் உழைப்பிற்கு உதவிசெய்து, பின் உழைப்பிற்கு ஏற்ப ஊதியம் பெறச் செய்வதையே குறிக் கும். இவ்வுதவி நாட்டிற்கு நலம் பயப்பதாதலைச் செல்வர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இத்தகைய நாட்டுப்பற்று ஒவ்வொருவருக்கும் உண்டாகிவிடுமாயின் நமது நாடு பொன் னுடாய் விளங்கும். தேச பக்தி, தெய்வ பக்தி இரண்டையும் மக்கள் தங்கள் இரண்டு கண்களாகக் கொள்ளுதல் வேண்டும். தேசப்பற்று மக்களிடம் உண்டாகிவிடுமாயின், பின் கடமை உணர்ச்சி தானுகவே வந்துவிடும். பின் அவரவர்களது கடமை யில் அவரவரும் தவருது நிற்பர்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே ;
சான்ருேனாக்குதல் தந்தைக்குக் கடனே ;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்ற சங்கப்பாட்டு, பலரது கடமைகளையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இதுவே இயற்கைநியதி. இம்முறையில், உழைத் துப் பெருக்கிய செல்வம் படைத்தோர், அதனைப் பிறர்க்கு ஈந்து அவர்களையும் பயனடையச் செய்தல் வேண்டும்.

"செல்வத்துப் பயனே ஈதல் ;
துய்ப்பே மெனினே தப்புந பலவே"

என்று சங்கத்துச் சான்ருேரும்,

" பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்று திருவள்ளுவரும் கூறுகின்றபடி, செல்வத்தைப் பலர்க்கும் பயன்படச் செய்தல் செல்வர்களது கடமையாகும்.

இத்தகைய பகுத்துண்டலே இன்று நம் ஜனநாயகத்தில் வேண்டத்தக்கது. இந்நிலை இயற்கையில் நிகழுமாறு அமைந்த அமைப்புக்களே தேவலாய மடாலயங்கள். பகுத்துண்ணும் நிலை, இவைகளில் இறையுணர்வோடு இயற்கையில் நிகழ்கின்றது. இவற்றையெல்லாம் உணர்ந்து, உழைப்பும், உதவியும், ஒற்றுமையும் வளர இறையருளை முன்னிட்டு முயல்வதே இன்று நாம் கொண்டாட வேண்டிய உண்மை வெள்ளி விழாவாகும். அத்தகைய விழா எங்கும் நிகழ்ந்து, யாவர்க்கும் பயனளிக்க செந்தமிழ்ச் சொக்கர் திருவருளை நினைந்து,

வாழ்க தன்னுரிமை!
வளர்க பாரத நாட்டு வளம்!

என்று வாழ்த்துகின்றோம்!

---


## "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா ... | ரூ. | 100—00 |
| உள்நாடு ... | ரூ. | 4—00 |
| வெளிநாடு ... | ரூ. | 6—00 |

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர்,
ஞானசம்பந்தம் அலுவலகம்
தருமையாதீனம்
தருமபுரம், மாயூரம் P. O.
தஞ்சை மாவட்டம்.